Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளிக்கிழமை, ஜனவரி 19 2024 | இதழ் 187

# தேர்தலுக்கு தயாராகிறது தி.மு.க. நாடாளுமன்ற தேர்தல் பணிக்குழு உட்பட 3 குழுக்கள் அமைப்பு ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, 19 ஜனவரி 2024: நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு, நாடாளுமன்ற தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு, கூட்டணி கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட குழு என 3 குழுக்களை தி.மு.க. அமைத்துள்ளது.

நாடாளுமன்றத்துக்கு இன்னும் 2 மாதங்களில் தேர்தல் நடத்த தலைமை தேர்தல் ஆணையம் தயாராகி வருகிறது. 7 கட்டங்களாக ஒட்டுப்பதிவு நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த மாதம் இறுதியில் அல்லது மார்ச் மாத தொடக்கத்தில் தேர்தல் அட்டவணை வெளியாகும்.

இதையடுத்து தேர்தலை சந்திக்க ஆளும் பாரதீய ஜனதாவும், காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டணியும் தயாராகி வருகின்றன.

பாரதீய ஜனதா கட்சி அடுத்த வாரம், முதல் வேட்பாளர் பட்டியலை வெளியிடும் என்று டெல்லியில் பரபரப்பாக பேசப்படுகிறது.

இதன் காரணமாக இந்தியா கூட்டணியிலும் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை சூடு பிடிக்க தொடங்கி உள்ளது.

தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணியில் பொங்கலுக்கு பிறகு குழுக்கள் அமைத்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது.

அதன்படி இன்று (வெள்ளிக்கிழமை) தி.மு.க.வில் 3 குழுக்கள் அமைத்து அறிவிப்பு வெளியிடப்பட்டு உள்ளது. கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்த ஒரு குழுவும், தேர்தல் அறிக்கை தயாரிக்க ஒரு குழுவும், தேர்தல் பணிகளை ஒருங்கிணைப்பதற்கு ஒரு குழுவும் என்று மொத்தம் 3 குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தேர்தல் பணிகளை ஒருங்கிணைப்பது தொடர்பாக தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

இந்த ஆண்டு (2024) நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலுக்கான தி.மு.க. பணிகளை ஒருங்கிணைக்கவும், மேற்பார்வையிடவும் பின்வரும் குழு அமைக்கப்படுகிறது.

இந்த குழுவில் அமைச்சர் கே.என்.நேரு, ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்த தி.மு.க.வில் 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தி.மு.க. பொருளாளரும், எம்.பி.யுமான டி.ஆர்.பாலு தொகுதி பங்கீடு குறித்து பேசும் குழுவுக்கு தலைவராக இருப்பார். அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, பொன்முடி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் எம்.பி.க்கள் ஆ.ராசா, திருச்சி சிவா ஆகிய 6 பேர் அதில் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர்.

இவ்வாறு தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

கனிமொழி தலைமையில் குழு

பாராளுமன்ற தேர்தலையொட்டி தேர்தல் அறிக்கை தயாரிக்க கனிமொழி எம்.பி. தலைமையில் 11 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ள மற்றொரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:-



தேர்தல் அறிக்கை குழு தலைவராக கனிமொழி கருணாநிதி எம்.பி. (தி.மு.க. துணை பொதுச் செயலாளர்), டி.கே.எஸ்.இளங்கோவன் (தலைமை கழக செய்தி தொடர்பு தலைவர்), பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் (தி.மு.க. சொத்துப் பாதுகாப்பு குழு செயலாளர்), அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா (தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர்), கோவி.செழியன் (தி.மு.க. வர்த்தக அணி துணைத்தலைவர்), கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் எம்.பி., சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. (தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர்), எம்.எம்.அப்துல்லா எம்.பி. (தி.மு.க. அயலக அணிச் செயலாளர்), டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. (தி.மு.க. மருத்துவ அணி செயலாளர்), மேயர் பிரியா.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் கூறியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியில் மாநில தலைவர் கே.எஸ்.அழகிரி தலைமையில் பாராளுமன்ற தேர்தலை சந்திக்க 35 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. அதில் தோழமை கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் குழு அமைக்கப்படுகிறது.

இந்த குழுக்களுடன் காங்கிரஸ் மேலிட பார்வையாளர் அஜய்குமார் இன்றும், நாளையும் ஆலோசனை நடத்துகிறார். அப்போது தி.மு.க.வுடன் எத்தனை தொகுதிகள் கேட்டு பெறுவது என்பது பற்றி முடிவு செய்யப்படும்.

அதன் பிறகு தி.மு.க. மற்றும் காங்கிரஸ் குழுக்கள் சந்தித்து தொகுதி பங்கீடு பற்றி பேச்சுவார்த்தை நடத்தும். அடுத்த வாரம் இந்த குழுக்கள் சந்திப்பு நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது தி.மு.க. - காங்கிரஸ் எத்தனை தொகுதிகளில் போட்டியிடும் என்பது தெளிவாக தெரிய வரும்.

# மணல் கொள்ளையை கண்டித்து அணைக்கட்டில் 22--ந் தேதி ஆர்ப்பாட்டம்: எடப்பாடி பழனிசாமி அறிவிப்புவ

சென்னை, 19 ஜனவரி 2024: அணைக்கட்டில் மணல் கொள்ளையை கண்டித்து அண்ணா தி.மு.க. சார்பில் வருகிற 22-ந் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இது குறித்து அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாட்டில் திமுக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல், திமுக-வைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுடைய அராஜகங்கள், வன்முறைச் சம்பவங்கள், சட்ட விரோதச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது தொடர்கதையாக உள்ளது.

இந்நிலையில், வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில், திமுக-வைச் சேர்ந்த உள்ளாட்சிப் பிரதிநிதிகளால் மணல் கொள்ளை, மண் கொள்ளை அமோகமாக நடைபெற்று வருவதாகவும், இதன் காரணமாக நிலத்தடி நீர் ஆதாரம் வெகுவாகக் குறைந்து வருவதாகவும், மணல் கொள்ளை சம்பந்தமாக இப்பகுதியைச் சேர்ந்த கழகத்தினரும், பொதுமக்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் அளித்தும், ஆட்சியாளர்களுக்கு பயந்து எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் மவுனம் காத்து வருவதாக அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் ஆதங்கத்துடன் புகார் தெரிவிக்கின்றனர்.

அதே போல், இந்த ஒன்றியத்தில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்குப் போதிய மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கான வசதிகள் இல்லாத



காரணத்தால் மலைவாழ் மக்கள் மிகுந்த சிரமப்படுவதாக தொடர்ந்து புகார் தெரிவித்த வண்ணம் உள்ளனர்.

இந்நிலையில், மக்கள் நலனில் சிறிதும் அக்கறை இல்லாமல் செயல்பட்டு வரும் திமுக அரசுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் திமுக-வினரால் நிகழ்த்தப்படும் மணல் கொள்ளை மற்றும் மண் கொள்ளையைக் கட்டுப்படுத்தத் தவறி

உள்ளதையும்; இங்கு வாழும் மலைவாழ் மக்களுக்குப் போதிய மருத்துவ வசதிகளை ஏற்படுத்தத் தவறி

உள்ளதையும் கண்டித்தும்; திமுக-வினரின் சட்ட விரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தவும், மலைவாழ் மக்களுக்கான மருத்துவ வசதிகளை உடனடியாக ஏற்படுத்தித் தரவும் திமுக அரசை வலியுறுத்தி, அண்ணா தி.மு.க. வேலூர் புறநகர் மாவட்டத்தின் சார்பில், 22 ந் தேதி திங்கட்கிழமை காலை 10 மணியளவில், அணைக்கட்டு பேருந்து நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், கழக துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.பி. முனுசாமி தலைமையிலும்; வேலூர் புறநகர் மாவட்டச் செயலாளர் த. வேலழகன் முன்னிலையிலும் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், வேலூர் புறநகர் மாவட்டத்தைச் சேர்ந்த சார்பு அமைப்புகளின் துணை நிர்வாகிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், மாவட்டத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் நிர்வாகிகளும், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் முன்னாள் பிரதிநிதிகளும், கழக உடன்பிறப்புகளும் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மக்கள் நலனை முன்வைத்தும், திமுக-வினரின் அராஜக செயல்களுக்கு துணை நிற்கும் திமுக அரசைக் கண்டித்தும், நடைபெற உள்ள இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், பொதுமக்கள் பெருந்திரளான அளவில் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# புரவங்கரா சென்னையில் 'ஆரோக்கியம் ' கருப்பொருளில் திட்டமிடப்பட்ட ஒரு புதிய வளர்ச்சித் திட்டமான பூர்வ செளக்யம் திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது



சென்னை, 19 ஜனவரி 2024: இந்தியாவின் மிகவும் போற்றப்படும் மற்றும் நம்பகமான ரியல் எஸ்டேட் டெவலப்பர்களில் ஒருவரான புரவங்கரா லிமிடெட் இன் மனை உருவாக்கப் பிரிவான பூர்வா லேண்ட், சென்னையின் கூடுவாஞ்சேரியில் அதன் புதிய 'ஆரோக்கியம் ' கருப்பொருளுடன் உருவாக்கப்பட்ட மனை உருவாக்க வளர்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

~120 ஏக்கர் உருவாக்கத்தின் ஒரு பகுதியாக றிலீணீவமீ மி இன் அறிமுகம் ஆனது பூர்வா லேண்ட் இன், நகரத்தின் மிகப்பெரிய திட்டமாகும். இந்த திட்டமானது 30,000 சதுர அடி கிளப்ஹவுஸ் உட்பட, ~600 சதுர அடி முதல் ~5,000 சதுர அடி வரை வரம்பைக் கொண்ட ~2,200 க்கும் மேற்பட்ட மனைகளைக் கொண்டுள்ளது . மற்றும் சமூகத்திற்கான 35 க்கும் அதிகமான வசதிகளையும் வழங்குகிறது. நுகர்வோர் தேவைகளை மனதில் கொண்டு, 80% மனைகள் ~800 சதுர அடி முதல் 1,800 சதுர அடி வரம்பில் உள்ளன.

தனிநபர்கள் மற்றும் சமூகத்தினரிடையே நல்லிணக்கம், சமநிலை மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக இந்த முழுமையான அணுகுமுறையை நவீன ஆரோக்கிய இடங்களுக்குள் ஒருங்கிணைப்பதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. கூடுதலாக, பூர்வா லேண்ட் மூலம் மனை உருவாக்க வளர்ச்சித் திட்டங்கள் முக்கிய இடங்களில் நிலப்பகுதிகள், தெளிவான பத்திரங்கள், தொடர்புடைய அரசாங்க ஒப்புதல்கள், சிறந்த உள்கட்டமைப்பு மற்றும் சமூக வாழ்வின் நன்மைகள் உட்பட பல நன்மைகளை வழங்குகின்றன.

இந்த அறிமுக விழாவில், புரவங்கரா லிமிடெட் குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரி அபிஷேக் கபூர் கூறுகையில், "பூர்வ செளக்கியம், குடியிருப்பாளர்களுக்கு ஒரு செளகரியமான மற்றும் சீரான வாழ்க்கை முறையை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் சென்னையில் திட்டமிடப்பட்ட வசதியாக்க இடத்தில் ஒரு முன்னுதாரண மாற்றத்தைக் குறிக்கிறது. அதன் விரிவான ஆரோக்கியத்தை மையமாகக் கொண்ட சேவைகள் மற்றும் வசதிகள், நிலையான வடிவமைப்பு மற்றும் இயற்கையுடன் ஒருங்கிணைப்பு ஆகியவற்றுடன், இந்தத் திட்டம் அதன் குடியிருப்பாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த ஒரு அமைதியான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைச் சூழலை வழங்கும்." என்று கூறினார்.

தொற்று பரவலுக்குப் பிறகு, மனை உருவாக்க வளர்ச்சிக்கான தேவை நாடு முழுவதும் அதிகரித்து வருகிறது. இது தனிப்பட்ட வெளிப்புற பகுதிகள் மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட வேலை/படிப்பு இடங்களை வழங்குகின்ற வகையில் திறந்தவெளிக்கான ஒரு விருப்பம் மற்றும் தனிப்பயன் வடிவமைப்புகளுடன் கூடிய வீடுகளுக்கான ஒரு விருப்பத்தால் உந்தப்படுகிறது. நகரத்தில் வீட்டு மனைகளுக்கான நாட்டம் அதிகரித்து வருவதைப் பற்றி, அபிஷேக் கபூர், "வீடு வாங்குபவர்களுக்கு, அவர்களின் விருப்பம் மற்றும் காலக்கெடுவுக்கு ஏற்ப ஒருவரின் வீட்டைக் கட்டுவதற்கான நெகிழ்வுத்தன்மையை மனைகள் வழங்குகின்றன. கூடுதலாக, புகழ்பெற்ற டெவலப்பர்களின் மனைகளும் பாதுகாப்பை வழங்குகின்றன மற்றும் வாடிக்கையாளர்களுக்கு ஒரு மதிப்பு அதிகரிக்கின்ற சொத்தை உருவாக்குகின்றன. டெவலப்பர்களுக்கு, மனை உருவாக்க மேம்பாடுகள் பெரிய அளவில் விற்கும் திறனை வழங்குகின்றன, பணப்புழக்கங்களைப் பெறவும் மற்றும் திட்டத்தை விரைவாக முடிக்கவும் வாய்ப்பளிக்கின்றன. சுவாரஸ்யமாக, எங்களின் தேவையில் 80-85% இறுதிப் பயனாளர்களிடம் உள்ளது."என்று கூறினார்.

பூர்வ செளக்கியம் ஆனது, உடல்நலம் மற்றும் உடற்பயிற்சி நிகழ்ச்சிகள், யோகா மற்றும் தியான வகுப்புகள், ஸ்பா சேவைகள், ஊட்டச்சத்து ஆலோசனை, விளையாட்டு மைதானங்கள், நீச்சல் குளங்கள், வெளிப்புற உடற்பயிற்சி பகுதிகள், நடைபயிற்சி மற்றும் சைக்கிள் ஓட்டுதல் தடங்கள், தியான மண்டலங்கள், பசுமையான இடங்கள் மற்றும் ஒரு சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை ஊக்குவிக்கும் சமூகம் கூடும் இடங்கள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

மூலோபாய ரீதியாக சென்னையின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள இந்த திட்டம் கிராண்ட் சதர்ன் டிரங்க் சாலையில் இருந்து 10 நிமிட தூரத்தில் உள்ளது. சென்னை சர்வதேச விமான நிலையம் சுமார் 20 கிமீ தொலைவில் உள்ளது மற்றும் என் எச் 32 வழியாக 35 நிமிடங்களில் எளிதாக அடையலாம். சிறந்த இணைப்பை கொண்டிருப்பதுடன் , இந்தத் திட்டம் பல புகழ்பெற்ற கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவ வசதிகளுக்கு நல்ல அணுகலைப் பெறுகிறது.

இது சென்னையின் வேகமாக வளர்ந்து வரும் மனை உருவாக்க வளர்ச்சி சந்தையில் புரவங்கரா இன் சமீபத்திய முயற்சியாக இருக்கும். இந்நிறுவனம் கடந்த ஆண்டு தொடக்கத்தில் திருமழிசையில் பூர்வராகம் என்ற இசை கருப்பொருள் அடிப்படையிலான திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

பூர்வ செளக்யம் தமிழ்நாடு ***RERA (TN/35/Layout/4355/2023; TN/35/Layout/4356/2023)*** இன் கீழ் பதிவு செய்யப்பட்டு, டிசம்பர் 2027 இல் ஒப்படைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# இந்தியாஸ்கில்ஸ் போட்டிக்கான பதிவு தேதி ஜனவரி 15 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது

சென்னை, 19 ஜனவரி 2024: திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தின் (எம் எஸ் டி ஈ) கீழ் இயங்கும் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் (என் எஸ் டி சி), இந்தியா திறன்கள் 2023-24-ஐ நடத்துகிறது- இது லட்சக்கணக்கானோரின் பங்கேற்பை எதிர்பார்க்கிறது. இந்த நிகழ்வானது எண்ணற்ற திறன்களைக் கொண்டாட எதிர்நோக்கி காத்துக்கொண்டிருக்கிறது , இது வாய்ப்புகள் நிறைந்த எதிர்காலத்தை கற்பனை செய்ய தனிநபர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.

அபரிமிதமான வரவேற்பு மற்றும் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் உள்ள பங்கேற்பாளர்களிடமிருந்து அதிகரித்து வரும் ஆர்வத்தைப் பார்க்கும்போது, போட்டிக்கான பதிவு காலக்கெடு 15 ஜனவரி 2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது..

இந்தியாவை உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாற்றும் மாண்புமிகு பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையுடன் இணைந்த இந்தப் போட்டி, 'அமிர்த் பீதி'க்கு ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது, பாரம்பரிய/புதிய வேலைப் பாத்திரங்களில் வேலை வாய்ப்பு மற்றும் களத் திறன்களை வெளிப்படுத்துகிறது. உலக அளவில் அவர்களின் திறமைகள். திறன்கள் மற்றும் கைவினைத்திறன் ஆகியவற்றின் துடிப்பான கொண்டாட்டமாக இந்தப் போட்டி நிற்கிறது, இது திறன் இடைவெளியைக் குறைக்கும் மற்றும் இளைஞர்கள் திறன், சிறப்பம்சம் மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றின் உலகத் தரத்தை அடைய உதவும் ஒரு வலுவான தளமாகும்.

நீட்டிக்கப்பட்ட காலக்கெடு, வேட்பாளர்களிடமிருந்து அதிகரித்து வரும் ஆர்வத்திற்கு இடமளிக்கும் மற்றும் அனைத்து சாத்தியமான பங்கேற்பாளர்களும் தங்கள் பதிவுகளை முடிக்க மற்றும் இந்த மதிப்புமிக்க நிகழ்வின் ஒரு பகுதியாக இருக்க போதுமான நேரம் இருப்பதை உறுதி செய்யும். இந்த மாபெரும் நிகழ்விற்கான பதிவு ஸ்கில் இந்தியா டிஜிட்டல் இணையதளத்தில் தொடங்கியுள்ளது, நாடு முழுவதும் உள்ள ஆர்வலர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த அழைக்கின்றனர். இந்த போட்டியானது மாவட்டம், மாநிலம், மண்டலம் மற்றும் தேசிய அளவில் பல கட்டங்களாக விரிவடைகிறது- 2024 இல் பிரான்சின் லியோனில் நடைபெறும் உலகத் திறன் போட்டியில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்பு வெகுமதியாகும்.

வேத் மணி திவாரி, சி ஈ ஓ, என் எஸ் டி சி மற்றும் எம் டி, என் எஸ் டி சி இன்டர்நேஷனல், வளர்ந்து வரும் நிபுணர்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதில் இந்தியாஸ்கில்ஸ் இன் பங்கை வலியுறுத்தினார். பங்கேற்பாளர்கள் தங்கள் திறமைகளை கச்சிதமாக வெளிப்படுத்தும் வாய்ப்பை வழங்குவதில் போட்டியின் முக்கியத்துவத்தை அவர் எடுத்துரைத்தார். கட்டுமானம் மற்றும் கட்டிடத் தொழில்நுட்பம், வாகனத் தொழில்நுட்பம், பேஷன் டிசைனிங், ஹேர் டிரஸ்ஸிங், பேக்கிங், இண்டஸ்ட்ரி 4.0, சைபர் செக்யூரிட்டி மற்றும் பலவற்றை உள்ளடக்கிய 60 க்கும் மேற்பட்ட பிரிவுகள் போட்டியில் உள்ளன. இந்த உள்ளடக்கம் தனிப்பட்ட சிறப்பிற்கான நோக்கத்தை விரிவுபடுத்துவதோடு மட்டுமல்லாமல் பல்வேறு துறைகளிடையே ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறது. தனித்துவமாக்குகிறது மற்றும் நமது திறன் மிகுந்த சாம்பியன்களுக்கு ஒரு மேடையை வழங்குகிறது. இந்தப் போட்டியானது 'குஷல் பாரத் விக்சித் பாரத்' என்ற பயிற்சியின் மூலம் தொழிற்கல்வியை தடையின்றி ஒருங்கிணைத்து, சுய-அதிகாரம், கண்டுபிடிப்பு மற்றும் செழிப்பான தொழில்களை நோக்கி இளைஞர்களின் பயணத்தை விளக்குகிறது.

# ராபிடோ, சென்னையில் ஆட்டோ மற்றும் பைக் டாக்ஸி கேப்டன்களுடன் பொங்கலைக் கொண்டாடுகிறது

சென்னை, 19 ஜனவரி 2024: இந்தியாவின் முன்னணி பயண தளமான ராபிடோ , சென்னை முழுவதும் உள்ள பல்வேறு பகுதிகளில் 100க்கும் மேற்பட்ட அர்ப்பணிப்புள்ள ஆட்டோ மற்றும் பைக் டாக்ஸி கேப்டன்களுடன் ஒரு கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்வதன் மூலம் பொங்கலின் சாரத்தைக் கொண்டுவந்தது. கிண்டியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி, அடையார், போரூர், அண்ணாநகர், வேளச்சேரி, தேனாம்பேட்டை, ஆவடி, அம்பத்தூர், மயிலாப்பூர், கோட்டூர்புரம், நுங்கம்பாக்கம், திருவான்மியூர், கொளத்தூர் மற்றும் பிற சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து ஆட்டோ கேப்டன்கள் ஒன்று கூடி இந்த பல நாள் இந்து அறுவடைத் திருநாளை அனுசரித்ததைக் கண்டது. . தைப் பொங்கல், ஏராளமான அறுவடை மற்றும் தமிழ் மாதமான தை மாதத்தின் தொடக்கத்திற்கான நன்றியைக் குறிக்கின்ற வகையில் மகத்தான கலாச்சார முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. சென்னை மக்களுக்கு வசதியான மற்றும் திறமையான போக்குவரத்து தீர்வுகளை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கும் அதன் கேப்டன்களின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புக்கு அதன் பாராட்டுகளை தெரிவிக்க இந்த வாய்ப்பை ராபிடோ பயன்படுத்தியது. கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, ராபிடோ அவர்களின் ஆட்டோ மற்றும் பைக் கேப்டன்களுக்கு பாரம்பரிய வேஷ்டியை வழங்கியது, மேலும் பொங்கலின் போது இனிமை மற்றும் செழிப்பைக் குறிக்கும் ஒரு வழக்கமான குறிப்புணர்த்தும் கரும்பும் வழங்கப்பட்டது.

பொங்கல் கொண்டாட்டம் குறித்து ராபிடோ வின் இணை நிறுவனர் பவன்குண்டுபள்ளி கருத்துத் தெரிவிக்கையில், "பொங்கல் என்பது நம் வாழ்வில் ஏராளமாக இருப்பதை ஒப்புக்கொள்ளவும், அறுவடைக்கு நன்றி தெரிவிக்கவும் நாம் ஒன்று கூடும் ஒரு நேரமாக இருக்கிறது. இந்த கொண்டாட்டத்தில், சென்னையின் பரபரப்பான தெருக்களில் பாராட்டப்படாத கதாநாயகர்களான எங்கள் அர்ப்பணிப்புள்ள ஆட்டோ மற்றும் பைக் கேப்டன்களை கெளரவிக்க நாங்கள் சிறிது நேரம் எடுத்துக்கொள்கிறோம். இந்த தனி நபர்கள், அவர்களின் திறமை மற்றும் அரவணைப்புடன் மக்களையும் இடங்களையும் தடையின்றி இணைக்கின்ற நமது நகரத்தின் உயிர்நாடிகளாக இருக்கிறார்கள். இந்த பொங்கலின் உண்மையான உணர்வில், நன்றியின் அரவணைப்பு நம் இதயங்களை நிரப்பட்டும், செழுமையின் இனிமை நம் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் ஊடுருவட்டும் . பொங்கலோ பொங்கல்!" என்று கூறினார். நம்பகமான, மலிவு மற்றும் அணுகக்கூடிய போக்குவரத்து விருப்பங்களை வழங்குவதன் மூலம் நகர்ப்புற போக்குவரத்தில் புரட்சியை ஏற்படுத்துவதில் ராபிடோ தொடர்ந்து முன்னணியில் உள்ளது. சென்னையில் ஆட்டோ மற்றும் பைக் டாக்சி கேப்டன்களுடன் இந்த பொங்கல் கொண்டாட்டமானது ராபிடோ வின் உள்ளடக்கிய மரபான்மை மற்றும் அது சேவை செய்யும் பல்வேறு சமூகங்களுக்கு பாராட்டு ஆகியவற்றை பிரதிபலிக்கிறது.

# டாடா மோட்டார்ஸ் அறிமுகப்படுத்தும் 'கஸ்டமர் கேர் மஹோத்சவ்' - வணிக வாகன வாடிக்கையாளர்களுக்கான ஓர் தனித்துவமான ஈடுபாட்டுத் திட்டம்

சென்னை, 19 ஜனவரி 2024: இந்தியாவின் மிகப்பெரிய வணிக வாகன உற்பத்தியாளரான டாடா மோட்டார்ஸ், வணிக வாகன வாடிக்கையாளர்களுக்காக, ஓர் விரிவான வாடிக்கையாளர் ஈடுபாடு திட்டமாக 'கஸ்டமர் கேர் மஹோத்சவ்' என்ற திட்டத்தை அறிவித்துள்ளது. 2024 ஜனவரி 14 முதல் மார்ச் 30 வரை திட்டமிடப்பட்டுள்ள இந்த முயற்சி, நாடு முழுவதும் உள்ள அனைத்து அங்கீகரிக்கப்பட்ட டாடா மோட்டார்ஸ் சேவை நிலையங்களிலும் நடைபெறும். கஸ்டமர் கேர் மஹோத்சவ் வாகனத்தொகுப்பின் உரிமையாளர்கள் மற்றும் டிரக் ஓட்டுநர்களுடன் அவர்களின் தேவைகள் மற்றும் வளர்ந்து வரும் போக்குகளைப் புரிந்துகொள்வதற்கான சிறந்த தளமாக செயல்படும். பயிற்சி பெற்ற தொழில்நுட்ப வல்லுனர்களின் நுணுக்கமான வாகன சோதனைகள், தேர்ந்தெடுக்கப்பட்ட அசல் உதிரிபாகங்களில் கவர்ச்சிகரமான தள்ளுபடிகள் மற்றும் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (எ எம் சி), வாகனத்தொகுப்பு மேலாண்மை தீர்வுகள் (எஃப் எம் எஸ்) மற்றும் ஃப்ளீட் எட்ஜ் போன்ற மதிப்பு கூட்டப்பட்ட சேவைகளுக்கான அணுகல் போன்ற பல நன்மைகளையும் இது வாடிக்கையாளர்களுக்கு வழங்கும். சம்பூர்ண சேவா 2.0 முன்முயற்சியின் கீழ், பாதுகாப்பான மற்றும் எரிபொருளைச் சேமிக்கும் ஓட்டுநர் நடைமுறைகள், வாகன ஆரோக்கியப் பரிசோதனைகள், வாகன ஆரோக்கியக் கருவிகள் மற்றும் அவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட மதிப்பு முன்மொழிவுகள் பற்றிய விரிவான பயிற்சிகளின் மூலம் ஓட்டுநர்கள் பலனடைவர்.

இந்த தனித்துவமான திட்டம் குறித்து கருத்து தெரிவித்த, டாடா மோட்டார்ஸின் நிர்வாக இயக்குனர் திரு. கிரிஷ் வாக் அவர்கள், "டாடா மோட்டார்ஸில், எங்கள் வணிகத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் வாடிக்கையாளரை மையமாகக் கொண்டுள்ளோம். எங்கள் சலுகைகள் மற்றும் சேவைகள் வாடிக்கையாளர்களின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டவை மற்றும் அவை எங்கள் வாடிக்கையாளர்களுக்கு முழுமையான மன அமைதியை உறுதி செய்கின்றன. இந்த மஹோத்சவ் எங்கள் செறிவான மற்றும் மாறுபட்ட சேவையை வெளிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. சலுகைகள், முறையான வாகனம் மற்றும் ஓட்டுநர் ஆரோக்கியப் பரிசோதனைகளை நடத்துதல், மேலும் வாடிக்கையாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுடனான எங்கள் உறவை வலுப்படுத்துதல் இதன் நோக்கமாகும். நமது நாடு முழுவதும் நடத்தப்படவுள்ள இந்த மஹோத்ஸவ் அனைத்து வணிக வாகனப் பணிமனைகளிலும் கொண்டாடப்படும் மற்றும் டிரக்குகள், பேருந்துகள் & வேன்கள் மற்றும் சிறிய டிரக்குகள் என ஒவ்வொரு தயாரிப்பு வரிசையையும் உள்ளடக்கும் இந்த மஹோத்சவ் உண்மையிலேயே எங்கள் வாடிக்கையாளர்களுக்குச் சாதகமாகவும் மதிப்பு கூட்டுவதாகவும் மாற்றுவதே எங்கள் நோக்கமாகும். நாங்கள் உன்னிப்பாக வடிவமைத்துள்ள டாடா மோட்டார்ஸின் விரிவான அளவிலான சலுகைகளை தீவிரமாகப் பங்கேற்கவும், தனிப்பட்ட முறையில் அனுபவிக்கவும் அனைத்து வாடிக்கையாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கும் அன்பான அழைப்பு விடுக்கிறோம்" என்று கூறினார்.

வகையினத்தின் முன்னணி வாகனங்களுடன், தொந்தரவில்லாத வாகன வாழ்க்கைச் சுழற்சி நிர்வாகத்திற்கான மதிப்பு கூட்டப்பட்ட சேவைகளையும் நிறுவனம் வழங்கும். டாடா மோட்டார்ஸின் சம்பூர்ண சேவை 2.0 வாகனம் வாங்குவதில் தொடங்கி வாகன வாழ்க்கைச் சுழற்சி முழுவதும் செயல்படும் ஒவ்வொரு அம்சத்தையும் ஆதரிக்கும் ஒரு விரிவான பராமரிப்பு தொகுப்பை வழங்குகிறது. இந்த அனைத்தையும் உள்ளடக்கிய தீர்வு பிரேக்டவுன் உதவி, உத்தரவாதம் அளிக்கப்பட்ட பணி-முடிப்பு நேரம், வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தங்கள் (எ எம் சி), செல் உதிரி பாகங்களுக்கான வசதியான அணுகல் மற்றும் கூடுதல் தொழில்துறை முன்னணி சேவைகளை உள்ளடக்கியது. டாடா மோட்டார்ஸ் ஃப்ளீட் எட்ஜ் - டேட்டா அனலிட்டிக்ஸ் மூலம் இயங்கும் இணைக்கப்பட்ட வாகன தளத்தையும் வழங்குகிறது. வாகனங்களுக்கு அப்பால் சென்று, நிறுவனம் உறுதியான ஆதரவையும் வசதியையும் உறுதிசெய்கிறது, ஒவ்வொரு கட்டத்திலும் வணிகங்களை மேம்படுத்துகிறது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# ஃபேபிண்டியா 'தி பிக் ஸ்பிரிங்' உங்களுக்காக வழங்குகிறது

சென்னை, 19 ஜனவரி 2024: சீசன் தொடங்கும் போது, ஃபேபிண்டியா ஃபேஷன் மற்றும் வாழ்க்கை முறை ஆர்வலர்களை "பிக் ஸ்பிரிங்" மூலம் ஸ்டைல், கைவினைத்திறன் மற்றும் நிலைத்தன்மையின் கொண்டாட்டத்தில் மூழ்கடிக்க அழைக்கிறது. இந்த ஃபேஷன் ஒரு அற்புதமான கொண்டாட்டம் பாரம்பரிய கைவினைப் பொருட்களையும், மற்றும் இதன் தரம் மலிவு விலையையும் இது ஈடுசெய்கிறது. அவர்களின் 350+ ஸ்டோர்கள் 9 ஜனவரி 2024 முதல் fabindia.com மற்றும் ஃபேபிண்டியா ஆப் ஆகியவற்றில் ஆன்லைனில் இவை அனைத்தும் நடக்கின்றன.



பிக் ஸ்பிரிங் பாரம்பரியம் மற்றும் நேர்த்தியின் இணைவை பிரதிநிதித்துவப்படுத்துகிறது, இது வசந்த காலத்தின் நிஜமான உணர்வைப் படம்பிடிப்பது மட்டுமல்லாமல், கைவினைஞர் ஃபேஷனில் ஃபேபிண்டியாவின் அர்ப்பணிப்பை எதிரொலிக்கிறது. உங்கள் அலுவலக அலமாரியை நீங்கள் புதுப்பித்தாலும், ஒரு விழாவில் கலந்து கொண்டாலும் அல்லது விடுமுறையைத் திட்டமிடுகிறீர்களென்றாலும், அவர்களின் சமீபத்திய டீல்கள் மற்றும் ஸ்டைல்கள் உங்களைப் பெருமிதபடுத்தும்

சமகால வடிவிலான குர்தாக்கள், புடவைகள், சட்டைகள் மற்றும் கால்சட்டைகளை வாங்கவும். சிறந்த இந்திய நகைகள், பைகள் மற்றும் காலணிகள் உள்ளிட்ட நவநாகரீக அசசரீஸ் மூலம் தோற்றத்தை நிறைவு செய்யுங்கள். வீட்டுத் துணிகள், அலங்காரம் மற்றும் பரிசுகள் பற்றிய ஃபேப் ஹோம் சேகரிப்புக்கும் இந்தத் தேர்வுகள் நீட்டிக்கப்பட்டுள்ளன. நிச்சயமாக, அதிகமாக வாங்குதல் பெரிய சேமிப்பிற்கு வழிவகுக்கும்.

ஃபேபிண்டியா வில் பிக் ஸ்பிரிங் பற்றி பேசுகையில், ஃபேபிண்டியா ரீடெய்ல் தலைவர் திரு. அஜய் கபூர், "வசந்த காலத்தின் துவக்கம் எப்போதுமே எங்கள் புரவலர்கள் தங்கள் அலமாரிகள் மற்றும் வீட்டு அலங்காரங்களை மேம்படுத்த ஒரு சிறப்பு இடத்தைப் பெற்றுள்ளது. அலுவலகங்களிலும், வீட்டிலும், பிரீமியம் நெய்யப்பட்ட பட்டுகள், பட்டு கலவை கொண்டாட்டங்கள் மற்றும் திருமணங்களுக்குச் செல்லும்போதும் அன்றாட ஆடைகளில் இந்திய ஹேண்ட் பிளாக் பிரிண்ட்கள் மற்றும் பாரம்பரிய கைவினைப் பொருட்களால் அலங்கரிக்கப்பட்ட பருத்தி மற்றும் மெல்லிய துணிகளை நாங்கள் வழங்குவோம். எங்கள் வாடிக்கையாளர்களுக்கு ஷாப்பிங் அனுபவத்தை எங்கள் அனைத்து கடைகளிலும் மறக்க முடியாததாக மாற்ற நாங்கள் எதிர்நோக்குகிறோம். இந்த வசந்தம் நிச்சயமாக ஸ்டைலில் பெரியதாகவும், சலுகைகளில் பெரியதாகவும், புன்னகையில் மிகப்பெரியதாகவும் இருக்கும்.

ஃபேபிண்டியாவின் பிக் ஸ்பிரிங் கொண்டாட்டத்தில் பிரமிக்க வைக்கும் ஆஃபர்களை ஆராயுங்கள், இதில் உங்கள் உணர்வுகளை நிச்சயம் கவரும் வகையில் திகைப்பூட்டும் சலுகைகள், டிசைன்கள் உள்ளன.

# சாம்சங் அறிவிக்கும் 'ஃபியூச்சர் ஃபெஸ்ட்'; கிமி ஆற்றலுடன் இயங்கும் பிரீமியம் டிவி வரம்பில் அற்புதமான சலுகைகளுடன் சினிமா அனுபவத்தின் எதிர்காலத்திற்கு மேம்படுத்துங்கள்

சென்னை, 19 ஜனவரி 2024: இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் மின்னணு பிராண்டான சாம்சங், அதன் பிரீமியம், 55 இன்ச் மற்றும் அதற்கும் அதிகமான பெரிய திரை தொலைக்காட்சிகளான நியோ கியூஎல்ஈடி 4கே அண்ட் 8கே, ஓஎல்ஈடி, கியூஎல்ஈடி, மற்றும் கிரிஸ்டல் 4கே யூஎச்டி ஆகியவற்றில் வாடிக்கையாளர்களுக்கு கவர்ச்சிகரமான சலுகைகள் மற்றும் ஈர்க்கத்தக்க கேஷ்பேக்குகளை வழங்குவதற்கான 'தி ஃபியூச்சர் ஃபெஸ்ட்' முன்முயற்சியை அறிவித்துள்ளது. 'தி ஃபியூச்சர் ஃபெஸ்ட்' என்பது, இந்த குடியரசு தினத்தில் அற்புதமாகத் தொகுக்கப்பட்ட சலுகைகளுடன் டால்பி அட்மோஸ், நியூரல் ஏ ஐ குவாண்டம் பிராசஸர் மற்றும் ஏ ஐ அப்ஸ்கேலிங் மூலம் சினிமா ஆடியோ-விஷுவல் அனுபவத்தை எதிர்காலத்திற்கு ஏற்ற வையில் மேம்படுத்த நுகர்வோருக்கு ஒரு சிறந்த வாய்ப்பாகும்.




சாம்சங் 98-இன்சு நியோ கியூஎல்ஈடி 4கே மற்றும் கியூஎல்ஈடி 4கே டிவிகளுக்கு ரூ. 124999 மதிப்புள்ள கேலக்ஸி எஸ்23 அல்ட்ரா (12/256 ஜி பி மாறுபாடு) இலவசமாக வழங்கப்படும்.

தேர்ந்தெடுத்த 50 இன்சு மற்றும் அதற்கு மேற்பட்ட நியோ கியூஎல்ஈடி, ஓஎல்ஈடி, கியூஎல்ஈடி மற்றும் கிரிஸ்டல் 4கே யூஎச்டி டி விகளுக்கு ரூ. 37990 மதிப்புள்ள சாம்சங் கியூ சீரீஸ் வயர்லெஸ் சவுண்ட்பார்கள் இலவசமாகக் கிடைக்கும். இது இணையற்ற படத் தரம் மற்றும் அதிவேக ஆடியோ அனுபவத்தை வழங்குகிறது.

சாம்சங் 85-இஞ்ச் மற்றும் 75-இஞ்ச் நியோ கியூஎல்ஈடி டிவிகளை வாங்கினால், வாடிக்கையாளர்கள் 69,990 மதிப்புள்ள சாம்சங் 50-இஞ்ச் கியூஎல்ஈடி 4கே தி செரீஃப் டி விஐ இலவசமாகப் பெறுவார்கள். இந்த வரையறுக்கப்பட்ட காலச் சலுகையானது, நம்பமுடியாத இரண்டு தொலைக்காட்சிகளை ஒன்றின் விலையில் கொண்டு வர உங்களை அனுமதிக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட சாம்சங் 65 & 55 இஞ்ச் ஓஎல்ஈடி & கியூஎல்ஈடி 4கே டிவிகளை வாங்கினால், வாடிக்கையாளர்கள் ரூ. 15990 மதிப்புள்ள சாம்சங் சவுண்ட்பார்-ஐ இலவசமாகப் பெறுவார்கள்.

"சாம்சங்கின் 'ஃபியூச்சர் ஃபெஸ்ட்' என்பது புதுமைகளின் கொண்டாட்டம் மற்றும் வீட்டு பொழுதுபோக்குகளில் சமீபத்திய ஏ ஐ-இயங்கும் முன்னேற்றங்களை நுகர்வோருக்கு வழங்குவதற்கான எங்கள் அர்ப்பணிப்பாகும். எங்களின் பிரீமியம் டிவிகள் அற்புதமான படம், ஒலி தரம் மற்றும் பிரமிக்க வைக்கும் வடிவமைப்புகளை வழங்குகின்றன, இதனால் பயனர்களின் வீடுகளின் மையப்பகுதியாக உயர்-இணைக்கப்பட்ட அனுபவத்தை வழங்குகிறது. ஃபியூச்சர் ஃபெஸ்ட் டீல்கள் நுகர்வோர் தங்கள் டிவிகளை எதிர்காலத்திற்கு ஏற்ற தயாரிப்புகளாக மேம்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகிறது." என்று கூறினார், சாம்சங் இந்தியாவின் விஷுவல் டிஸ்ப்ளே பிசினஸின் மூத்த துணைத் தலைவர் மோகன்தீப் சிங் அவர்கள்.

# எம்ஜிஎம் கேன்சர் இன்ஸ்டிடியூட் தொடங்கும் கிளினிக் (பி) மகளிருக்கு ஒரே இடத்தில் முழுமையான சேவைகளை வழங்கும் மார்பக கிளினிக்

சென்னை, 19 ஜனவரி 2024: எம்ஜிஎம் ஹெல்த்கேர் குழுமத்தின் ஒரு அங்கமாக, புற்றுநோய்க்கான சிகிச்சை செயல்தளத்தில் முதன்மை வகிக்கும் நவீன மருத்துவமனை என புகழ்பெற்றிருக்கும் எம்ஜிஎம் கேன்சர் இன்ஸ்டிடியூட், மார்பகம் தொடர்பான அனைத்து பிரச்சனைகளுக்கும் மேம்பட்ட மற்றும் நவீன சிகிச்சையை வழங்குவதற்காக மார்பக நலத்திற்கு கிளினிக் பி என்ற பெயரில் ஒரு பிரத்யேக கிளினிக்கை தொடங்கியிருக்கிறது. எம்ஜிஎம் கேன்சர் இன்ஸ்டிடியூட்டில் நிறுவப்பட்டுள்ள கிளினிக் பி-ஐ எம்ஜிஎம் ஹெல்த்கேர் மற்றும் எம்ஜிஎம் கேன்சர் இன்ஸ்டிடியூட்டின் இயக்குனர் டாக்டர். உர்ஜிதா ராஜகோபாலன் அவர்கள் முன்னிலையில், பிரபல திரைப்பட இயக்குனர் திருமதி. கிருத்திகா உதயநிதி திறந்து வைத்தார். பெண்களின் உடல்நலத்தில் தொடர்ந்து இருந்து வரும் ஒரு பெரும் கவலையாக மார்பக புற்றுநோய் இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் 1.38 மில்லியன் நபர்களிடம் மார்பக புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டிருக்கிறது. அதாவது, ஒவ்வொரு 4 நிமிடங்களுக்கும் ஒரு பெண்ணுக்கு மார்பக புற்றுநோய் இருப்பது உறுதி செய்யப்படுகிறது. இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலால் (ஐசிஎம்ஆர்) செய்யப்பட்ட ஒரு ஆய்வின்படி, 2024-ம் ஆண்டின் அமெரிக்கன் கேன்சர் சங்கத்தால் ''கேன்சர்', ஆன் இண்டர்டிசிபிளினரி ஜர்னல்" என்ற இதழில் சமீபத்தில் பிரசுரிக்கப்பட்ட ஆய்வு கட்டுரையில் மார்பக புற்றுநோய் உறுதி செய்யப்பட்ட பெண் நோயாளிகளில் 5 ஆண்டுகள் கடந்து உயிர்வாழும் விகிதம் இந்தியாவெங்கிலும் 66.4 சதவிகிதமாக இருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. யுஎஸ்ஏ போன்ற வளர்ந்த நாடுகளில் இவ்விகிதம், 90.2 என இருக்கிறது. இந்தியாவில் இவ்விகிதம் குறைவாக இருப்பதற்கு, தாமதிக்கப்படும் நோயறிதல் செயல்பாடுகள் மற்றும் மேலதிக சிகிச்சைக்கு உரிய நேரத்திற்குள் மருத்துவ ஆலோசனையைப் பெற தவறுவது ஆகியவற்றை காரணங்களாக குறிப்பிடலாம். புற்றுநோய்க்கு சிகிச்சையின் மூலம் குணமடைந்து உயிர் வாழும் விகிதத்தை மேம்படுத்துவதற்கு தொடக்க நிலையிலேயே நோயறிதலையும் மற்றும் உடனடியாக மருத்துவ சிகிச்சையையும் பெறுவது மிக முக்கியமான காரணங்களாக இருக்கின்றன. மார்பக புற்றுநோய்க்கு எதிரான யுத்தத்தில் ஆரம்ப நிலையிலேயே கண்டறிதல் இன்றியமையாத அம்சமாக திகழ்கின்றபோது, உரிய நேரத்தில் அதனை பரிசோதனைகளின் மூலம் உறுதிசெய்வது திறன்மிக்க சிகிச்சை வழங்கப்படுவதன் அடித்தளமாக இருக்கிறது என்றே கூறலாம். மிதமான கட்டணத்தில் சிகிச்சை திட்டத்தின் மூலம் தரமான பராமரிப்பு சேவைகளை வழங்கும் எம்ஜிஎம் கேன்சர் இன்ஸ்டிடியூட் -ன் கிளினிக் பி, மார்பகம் தொடர்பான அனைத்து பாதிப்பு நிலைகளுக்கும் உயர்சிகிச்சையை வழங்கும் முதன்மை அமைவிடமாகத் திகழும். மார்பகம் தொடர்பான ஐயங்கள், கேள்விகளுக்கு சரியான பதிலையும், விளக்கத்தையும் வழங்குவதன் மூலம் நோயாளிகளுக்கு உதவுவதே இச்சேவையின் நோக்கம். மார்பக புற்றுநோய்க்கான ஸ்க்ரீனிங் குறித்து விழிப்புணர்வை உருவாக்குவதும் கிளினிக் பி-ன் மற்றொரு குறிக்கோளாகும். புற்றுநோயியல் மருத்துவர்கள், கதிர்வீச்சு சிகிச்சையியல் நிபுணர்கள், மார்பக அறுவைசிகிச்சை வல்லுனர்கள், புற்றுநோய்க்கான கதிர்வீச்சியல் மருத்துவர்கள், நோயியல் மருத்துவர்கள், மார்பக சிகிச்சைக்கான செவிலியர்கள், சிறப்பு பயிற்சி பெற்ற மருத்துவர்களின் உதவியாளர்கள், இயன்முறை சிகிச்சை நிபுணர்கள், புற்றுநோய்க்கான உளவியல் ஆலோசகர்கள் மற்றும் பிற சிறப்பு நிபுணர்களின் வலுவான குழுவினர் கிளினிக் பி-ல் பணியாற்றுகின்றனர். மார்பக ஆரோக்கியத்தைப் பாதிக்கும் அனைத்து பிரச்சனைகள், கொழுப்பு கட்டிகளிலிருந்து, தீங்கற்ற கட்டிகள் மற்றும் புற்றுக்கட்டிகள் உட்பட பாதிப்பு நிலைகளுக்கு மேம்பட்ட தீர்வுகளை இக்குழுவினர் வழங்குவார்கள். இந்த கிளினிக், பணியாளர்களாக பெண்களை மட்டுமே கொண்டிருக்கும் "அனைத்து மகளிர் பிரிவாக" இருக்கிறது. மார்பக ஆரோக்கியத்தின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்குகிறவாறு ஒவ்வொருவருக்கும் பிரத்யேக சிகிச்சை திட்டத்தை உருவாக்க பல்வேறு துறைகளைச் சேர்ந்த மருத்துவப் பணியாளர்கள் ஒருங்கிணைந்து ஒத்துழைப்போடு செயல்படுவது இப்பிரிவின் தனிச்சிறப்பாகும். தொடக்க நிலையிலேயே நோய் கண்டறிதல், நோயை உறுதிசெய்யும் பரிசோதனை சேவைகள், மரபியல் ரீதியிலான ஆலோசனை, மார்பகத்தை அகற்றாமல் தக்கவைத்தல், ஆன்கோபிளாஸ்டி மார்பக அறுவைசிகிச்சை, மார்பக நீக்கல் மற்றும் மறுசீரமைப்பு சிகிச்சை,

இதனோடு தொடர்புடைய துணை செயல்முறைகள் மற்றும் இடர்வாய்ப்பை குறைக்கும் அறுவைசிகிச்சை ஆகியவை கிளினிக் பி-ல் வழங்கப்படுகின்றன. எம்ஜிஎம் கேன்சர் இன்ஸ்டிடியூட் -ன் புற்றுநோயியல் சிகிச்சை சேவைகள் துறையின் இயக்குனரும், முதுநிலை நிபுணருமான டாக்டர். எம்.ஏ. ராஜா பேசுகையில், "இந்திய பெண்கள் மத்தியில் மிக அதிகமாக கண்டறியப்படும் புற்றுநோயாக மார்பக புற்றுநோய் இருக்கிறது. அது மட்டுமின்றி, இப்பாதிப்பு நிலை தொடர்பாக மக்கள் மனதில் பரவலான அச்சமும், தவறான கண்ணோட்டங்களும் இருக்கின்றன. அவர்களது மருத்துவ நிலைமை குறித்து தெளிவான புரிதல், கிடைக்கக்கூடிய சிகிச்சை வாய்ப்புகள் பற்றிய அறிவு, இச்சிக்கலான சவால்களை கடந்து செல்வதற்கான ஆதரவு செயல்முறைகள் மற்றும் உகந்த மருத்துவ சிகிச்சைக்காக ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறை ஆகியவை பற்றிய ஒரு தெளிவான புரிதலை நோயாளிகளுக்கு வழங்குவது மிக முக்கியமானது. உயர்தர பராமரிப்பு சேவை மற்றும் சிகிச்சையை நோயாளிகள் பெறுவதை உறுதிசெய்வது, இந்த மார்பக கிளினிக் தொடங்கப்பட்டிருப்பதன் நோக்கம்; அது மட்டுமன்றி, தொடக்க நிலையிலேயே பாதிப்பு நிலையை கண்டறிவதும் மற்றும் அவர்களது உடல்நலத்திற்கு முன்னுரியமையளிக்குமாறு பெண்களை சுற்றியுள்ள மற்றவர்களை ஊக்குவிப்பதும், உரிய காலஅளவுகளில் ஸ்க்ரீனிங் செயல்பாட்டை மேற்கொள்வதும், மருத்துவருடன் கலந்தாலோசனை செய்வதும், கிளினிக் தொடங்கப்பட்டிருப்பதன் குறிக்கோளாகும்." என்று கூறினார். எம்ஜிஎம் ஹெல்த்கேர் மற்றும் எம்ஜிஎம் கேன்சர் இன்ஸ்டிடியூட் -ன் இயக்குனர் டாக்டர். உர்ஜிதா ராஜகோபாலன் இந்நிகழ்வில் பேசுகையில், "பெண்கள் திறனதிகாரம் பெற வேண்டுமென்ற குறிக்கோளுக்காக நாங்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகிறோம். தொடக்க நிலையிலேயே மார்பகத்தில் உருவாகக்கூடிய சாத்தியத்திறனுள்ள இயல்பு பிறழ்வுகளை அடையாளம் காண்பதற்கு அவர்களை திறனுள்ளவர்களாக ஆக்குவது அதன் முக்கியமான அம்சமாகும். ஆரம்ப நிலையிலேயே பாதிப்பை கண்டறிவது உடனடியாக சிகிச்சைத் தொடங்க உதவுகிறது மற்றும் நோயிலிருந்து மீண்டு உயிர் பிழைப்பதற்கான விகிதாச்சாரத்தை மேம்படுத்துகிறது. ஒவ்வொரு பெண்ணுக்கும் மேம்பட்ட சிகிச்சை முறையியல்களுடன் சாத்தியமுள்ள மிகச்சிறந்த சிகிச்சையை முழுமையாக வழங்குவதே எம்ஜிஎம் கேன்சர் இன்ஸ்டிடியூட்டில் எமது கடமையாக இருக்கிறது. ஒவ்வொரு பெண்ணுக்கும் மிகச்சிறந்த சிகிச்சைக்கான தகுதி இருக்கிறது என்பது எமது வலுவான நம்பிக்கை; எனவே, மிக நவீன மற்றும் முழுமையான சிகிச்சை பராமரிப்பை வழங்க நாங்கள் முனைப்புடன் செயல்படுகிறோம். பெண்கள் அனைவரும் அவர்களது உடல்நலத்திற்கு முன்னுரிமையளிக்குமாறும், மார்பக புற்றுநோய்க்கு குறித்த காலஅளவுகளில் ஸ்க்ரீனிங் சோதனைகளை செய்துகொள்ளவும் நாங்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். அத்துடன், புற்றுநோயின் சவால்கள் இல்லாத ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை பின்பற்றுமாறு நாங்கள் அவர்களை வேண்டி கேட்டுக்கொள்கிறோம்." என்று குறிப்பிட்டார். பிரபல திரைப்பட இயக்குனர் திருமதி. கிருத்திகா உதயநிதி இந்நிகழ்வில் உரையாற்றியபோது, "உடல்நல விழிப்புணர்வின் மூலம் பெண்களை திறனதிகாரம் பெறச் செய்வது மிக முக்கியம். இந்த உடல்நல விஷயம் குறித்து பேசாமல், அதனை ஒதுக்கிவிடக்கூடாது என்று நான் எல்லா பெண்களையும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். சுய மார்பக பரிசோதனையை தவறாது செய்யவும் மற்றும் ஏதேனும் அசௌகரியம் உணரப்படுமானால், உடனடியாக ஸ்க்ரீனிங் சோதனையை செய்து கொள்ளவும் நான் அனைவரையும் ஊக்குவிக்கிறேன். இந்த கிளினிக் தொடங்கப்பட்டிருக்கும் சிறப்பான முன்னெடுப்போடு மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு பற்றிய செய்தியையும் நாம் மக்கள் மத்தியில் பரப்ப வேண்டும். தொடக்க நிலையிலேயே மார்பக புற்றுநோயைக் கண்டறிவது நமது உயிர்களை காக்கும். இது குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதன் மூலம் மகளிரின் ஆரோக்கியத்தில் அர்த்தமுள்ள தாக்கத்தை நம்மால் ஏற்படுத்த முடியும். பெண்களின் நலவாழ்விற்காக பிரத்யேகமாக இந்த சிறப்பான முன்னெடுப்பை மேற்கொள்வதற்காக எம்ஜிஎம் ஹெல்த்கேர் மற்றும் எம்ஜிஎம் கேன்சர் இன்ஸ்டிடியூட் நிர்வாகத்தினருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்." என்று கூறினார். கிளினிக் பி தொடக்கவிழா சிறப்பு சலுகையாக "பிரெண்ட்ஸ் ஃபார் எவர்- மாமோகிராம் ஸ்கிரீனிங் புரோகிராம்" என்ற திட்டத்தை கிளினிக் பி வழங்குகிறது. 2024 பிப்ரவரி 29 - ம் தேதி வரை செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில் ரூ.1999 என்ற எளிய கட்டணத்தில் இரண்டு நபர்களுக்கு மேமோகிராம் சோதனையோடு மருத்துவருடன் இலவச கலந்தாலோசனையும் இடம்பெறுகிறது.



"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# போக்குவரத்து தொழிற்சங்கங்களுடன் இன்று முத்தரப்பு பேச்சுவார்த்தை





சென்னை, 19 ஜனவரி 2024: போக்குவரத்து தொழிற் சங்கங்களுடன் இன்று முத்தரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது.

போக்குவரத்துத் தொழிலாளர்களின் 6 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கத்தினர் வேலை நிறுத்த நோட்டீசை வழங்கி இருந்தனர். பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாததையடுத்து கடந்த 9, 10 ஆகிய தேதிகளில் போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பான வழக்கில் பொதுமக்கள் நலன் கருதி நிபந்தனையுடன் ஜனவரி 19-ந்தேதி வரை வேலை நிறுத்தத்தை ஒத்திவைப்பதாக சென்னை கோர்ட்டில் தொழிற்சங்கங்கள் தெரிவித்தன. இதையடுத்து இன்று (வெள்ளிக்கிழமை) 4-ம் கட்ட பேச்சு வார்த்தைக்கு வரும்படி போக்குவரத்து தொழிற்சங்கங்கள், போக்குவரத்துக் கழகங்களுக்கு தொழிலாளர் நலத்துறை அழைப்பு விடுத்து இருந்தது. அதன்படி, சென்னை அம்பத்தூர் மங்களாபுரத்தில் உள்ள தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தில் போக்குவரத்து தொழிற்சங்கங்களுடன் முத்தரப்பு பேச்சுவார்த்தை தொடங்கியது. இதில் தொழிலாளர் நலத்துறை தனி இணை ஆணையர் ரமேஷ் தலைமையில் தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள், போக்குவரத்து கழகங்களின் இயக்குனர்கள், சங்கத்தினர் கலந்து கொண்டுள்ளனர். இதன் முடிவில், அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்து தெரியவரும்.

# வாகனன் சென்னையில் நெட்வொர்க்கை மேலும் விரிவுபடுத்துகிறது; ப்ளூ காலர் பணியமர்த்தலை மேம்படுத்த சிறு மற்றும் நடுத்தர ஆட்சேர்ப்பு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும்

சென்னை, 19 ஜனவரி 2024: இந்தியாவின் மிகப்பெரிய ப்ளூ காலர் டெலிவரி பணியமர்த்தல் தளமான வாஹறன், சென்னையில் தனது "வாஹன் லீடர்ஸ்" முன்முயற்சியுடன் முன்னேறி வருகிறது. இந்த திட்டம் உள்ளூர் மட்டத்தில் ப்ளூ-காலர் பணியமர்த்தலில் நிபுணத்துவம் பெற்ற மனிதவள ஆலோசனைகள் மற்றும் திறமை கையகப்படுத்தும் நிறுவனங்களுடன் தீவிரமாக ஈடுபடுகிறது.

இந்த நிறுவனங்கள் தங்கள் வணிகங்களை அளவிடுவதற்கு உதவும் பல்வேறு அம்சங்களில் அவர்களுக்கு ஆலோசனை வழங்கும் வாஹறனின் நிபுணர்களை அணுக உதவுவதன் மூலம் அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. பல்வேறு உள் செயல்முறைகளை கட்டமைத்தல், சரியான ஊக்கத்தொகை நடவடிக்கைகளை அமைத்தல் மற்றும் அந்தந்த வணிகங்களின் அடித்தளத்தை மேலும் வலுப்படுத்த கையால் வழிகாட்டுதல் ஆகியவை பிற நன்மைகளில் அடங்கும். மாதத்திற்கு சராசரியாக 250,000 ரூபாய் சம்பாதிக்கும் 10,566 நுண் தொழில்முனைவோருடன் வாஹறன் நெருக்கமாக வேலை செய்கிறார்.

இந்த முன்முயற்சியின் பல வெற்றிக் கதைகளில் ஒன்று, தனது சொந்த பணியமர்த்தல் நிறுவனத்தைத் தொடங்கி வணிக உரிமையாளராக மாறிய விநியோகத் தொழிலாளியான திரு சுபம் உபாத்யாய். ஆரம்பத்தில், உபாத்யாய், முன்பு வாஹனால் ஒரு முன்னணி உணவு விநியோக மேடையில் டெலிவரி ரைடராக நியமிக்கப்பட்டார். வஹறனின் பி. ஓ. சி சுபமின் தொழில்முனைவோர் மனப்பான்மையையும் அவரது திறனையும் அங்கீகரித்து அவரை வஹன் தலைவர் திட்டத்தில் சேர்த்தது. வஹறனின் ஆதரவுடன், சுபம் சிறந்த நடைமுறைகளை ஏற்றுக்கொண்டார், தொழில்நுட்ப ஆதரவைப் பெற்றார், நிபுணர்களை அணுக முடிந்தது. இன்று, அவர் தனது வணிகத்தை ஒரு தனி தொழில்முனைவோராக இருந்து 12 டெலிகாலர்கள் கொண்ட குழுவுடன் பணிபுரிவதாக மாற்றியுள்ளார். ஒன்றாக, அவர்கள் தொடர்ந்து மாதந்தோறும் 250 க்கும் மேற்பட்ட வேட்பாளர்களை நிறுத்துகின்றனர், மேலும் இந்த ஆண்டு இறுதிக்குள் அந்த எண்ணிக்கையை இரட்டிப்பாக்கும் பாதையில் உள்ளனர். இந்த முன்முயற்சியால் பயனடைந்த பல ஆலோசகர்களில் உபாத்யாய் ஒருவர். தனது வணிகம் மற்றும் வஹனிடமிருந்து கிடைத்த ஆதரவால் மகிழ்ச்சியடைந்த அவர், "ஒரு நாள் எனது சொந்த நிறுவனத்தைத் தொடங்க முடியும் என்று நான் கனவு கண்டதில்லை. வாஹறனின் உதவியுடன் என்னால் கனவு காணவும், பெரிதாக சிந்திக்கவும் முடிகிறது. நான் பெற்ற செயல்பாட்டு மூலதனக் கடன் ஒரு அலுவலகத்தை அமைக்கவும், விரிவாக்கம் பற்றி சிந்திக்கவும் எனக்கு உதவியது. நான் ஒத்த எண்ணம் கொண்டவர்களுடன் ஈடுபடுவதையும், எனது நிறுவனத்தை வளர்ப்பதையும் பார்ப்பேன்".

சிறு மற்றும் நடுத்தர அளவிலான திறமைகளை கையகப்படுத்துதல் அல்லது ஆட்சேர்ப்பு நிறுவனங்கள் பெரும்பாலும் எதிர்கொள்ளும் முக்கிய கவலைகள் தொழில்துறையில் உள்ள முக்கிய நிறுவனங்களுக்கு நேரடி அணுகலைப் பெறுவதில் உள்ள சவால்கள் என்பதை வஹன் அடையாளம் கண்டுள்ளார். அவர்கள் அணுகலைப் பெற்றாலும், பணம் செலுத்தும் சுழற்சிகள் நீளமானவை, மேலும் ஏஜென்சிகள் செய்யக்கூடிய வரையறுக்கப்பட்ட அளவு காரணமாக பணம் செலுத்துதல்கள் போதுமானதாக இருக்காது.

மேற்கூறியவற்றை அங்கீகரித்து, இந்த திட்டம் மற்றும் தளம் ஆட்சேர்ப்பு ஆலோசகர்கள் மற்றும் ஏஜென்சிகளுக்கு ஜெப்டோ, சொமேட்டோ, ஸ்விக்கி, பிளிங்கிட், பிளிப்கார்ட், ரேபிடோ, அமேசான் போன்ற பெரிய நிறுவனங்களை அணுக உதவுகிறது. வாஹறனுடன் கூட்டுசேர்வதன் மூலம், இந்த ஆட்சேர்ப்பு முகமைகள் குறைந்த மூலதன முதலீடு, சேருதல் அல்லது உரிமையாளர் கட்டணம் இல்லாமல் சிறந்த கொடுப்பனவுகளை அடைய முடியும், மேலும் விரைவான இடைவெளியை உறுதி செய்யும் தங்கள் வணிகத்திற்கு ஒரு அடித்தளத்தை அமைக்கலாம். விரைவான கொடுப்பனவுகள், செயல்பாட்டு மூலதனக் கடன்களுக்கான அணுகல் மற்றும் ஒரு நிபுணர் நெட்வொர்க்கை அணுகுவதன் மூலம் நிலையான ஆதரவை இது உறுதி செய்கிறது, இது அவர்களின் வணிகங்களை வெற்றிகரமாக வளர்ப்பதற்கான அமைப்புகள் மற்றும் செயல்முறைகளை அமைக்க உதவுகிறது.

வாஹறன் 250 க்கும் மேற்பட்ட நகரங்களில் இயங்குகிறது மற்றும் 400,000 க்கும் மேற்பட்ட டெலிவரி ரைடர்களை வெற்றிகரமாக நிறுத்தியுள்ளது, இது நாட்டின் மிகப்பெரிய டெலிவரி பணியமர்த்தல் தளமாக திகழ்கிறது. வஹன் தலைமைத்துவ முன்முயற்சியின் மூலம், நிறுவனம் இந்த ஆண்டு பல மடங்கு வளர்ச்சிக்கு தயாராக உள்ளது.

# கண் அழுத்த நோய்க்கு கண் சொட்டுமருந்தை பயன்படுத்துவதி-லிருந்து விடுதலை தரும் குறைந்த ஊடுருவல் அறுவைசிகிச்சை




சென்னை, 19 ஜனவரி 2024: டாக்டர். அகர்வால்ஸ் கண் மருத்துவமனை - சென்னை, கண் அழுத்த நோய்க்கு குறைந்த ஊடுருவல் உள்ள அறுவைசிகிச்சையின் மூலம் கண் அழுத்த நோய்க்காக கண் சொட்டுமருந்தை 10 ஆண்டுகளாக தினசரி பயன்படுத்தி வந்த 63 வயதான ஒரு நோயாளிக்கு அதிலிருந்து விடுதலை அளித்திருக்கிறது. இம்மருத்துவமனையின் திறன்மிக்க அறுவைசிகிச்சை மருத்துவர்களது குழுவால் மேற்கொள்ளப்பட்ட 10 நிமிட விமிநிஷி அறுவைசிகிச்சை, கண்ணுக்குள் இருந்த அழுத்தத்தை கணிசமான அளவு குறைத்திருக்கிறது. இந்த அழுத்தமே கண் அழுத்த நோய்க்கான அடிப்படை காரணம். இந்த வெற்றிகர அறுவைசிகிச்சையினால், கண் அழுத்த பாதிப்பு மேலும் மோசமாகாமல் தடுப்பதற்கு கண் சொட்டுமருந்தை இந்நோயாளி தினசரி பயன்படுத்துவதை இது அவசியமற்றதாக ஆக்கியிருக்கிறது.

மிக அதிகமாக கண்டறியப்படும் கண் கோளாறுகளுள் இரண்டாவது நிலையிலுள்ள கண் அழுத்த நோய், பார்வைத்திறனிழப்புக்கான மூன்றாவது முன்னணி காரணமாகவும் இருக்கிறது. 100 நபர்களில் 3 பேரை இது பாதிக்கிறது. நம் இந்திய நாட்டில், 40 ஆண்டுகள் மற்றும் அதற்கும் மேற்பட்ட வயதுள்ள சுமார் 11.9 மில்லியன் நபர்கள் கண் அழுத்த நோய் பாதிப்புடன் வாழ்ந்து வருகின்றனர். கண் அழுத்த நோய் வந்தபிறகு சிகிச்சையின் மூலம் அதனை முற்றிலுமாக குணப்படுத்த இயலாது; படிப்படியாக வளர்ச்சியடையக்கூடிய பார்வை நரம்பு சார்ந்த இயக்கக் கோளாறாக இது இருக்கிறது. கண்ணுக்குள் நீர்மங்கள் உட்பாய்வு அதிகரிக்கும்போது அல்லது வெளிப்பாய்வு குறையும்போது கண்ணுக்குள் அழுத்தம் அதிகரிக்கும் நேரத்தில் இது நிகழ்கிறது. அதிகரித்த அழுத்தம் பார்வை நரம்புகளை சேதப்படுத்துகிறது. கண்ணின் திரவ வெளியேற்ற அமைப்பை மேம்படுத்துவதற்கு மிகச்சிறிய ஸ்டண்ட்களை பதியம் செய்வது போன்ற பல உத்திகளைப் பயன்படுத்தி திரவ வெளிப்பாய்வை அதிகரிப்பதன் மூலம் கண்ணின் உள்ளார்ந்த அழுத்தத்தை எம் ஐ ஜி எஸ் - ஆல் குறைக்க முடியும். டாக்டர். அகர்வால்ஸ் - ன் அறுவைசிகிச்சை நிபுணர்கள் குழு, சென்னையைச் சேர்ந்த இந்த முதிய நோயாளிக்கு இரு ஸ்டென்ட்களை பொருத்தி அவரது கண்ணின் திரவ வெளியேற்றத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கண்ணுக்குள் இருந்த அழுத்தத்தை இந்த அறுவைசிகிச்சை சுமார் 35 % வரை வெற்றிகரமாக குறைத்திருக்கிறது. கண் சொட்டுமருந்து பயன்படுத்துவதை இந்நோயாளி இனிமேல் நிறுத்திவிடலாம். இந்த அறுவைசிகிச்சையைத் தொடர்ந்து குறித்த காலஅளவுகளில் கண் அழுத்த கண்காணிப்பு மற்றும் கண் நரம்பு பரிசோதனையை மட்டும் செய்துகொண்டால் போதுமானது. டாக்டர். அகர்வால்ஸ் கண் மருத்துவமனையின் செயலாக்க இயக்குனர் & தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர். அஸ்வின் அகர்வால், எம் ஐ ஜி எஸ் சிகிச்சை உத்தியின் பலன்கள் பற்றி பேசுகையில், “எம் ஐ ஜி எஸ் என்பது, கிளாகோமா என அழைக்கப்படும் கண் அழுத்த நோய்க்கான அறுவைசிகிச்சையின் ஒரு புதிய வகையினமாகும். தாங்குதிசு நீக்க சிகிச்சை (ட்ராபெகுலெக்டோமி) என்பதற்கு மாற்றாக அதிக பாதுகாப்பான மற்றும் குறைவான ஊடுருவல் உள்ள சிகிச்சை உத்தியை வழங்குவதன் மூலம் கண் அழுத்த நோய் மேலாண்மை தளத்தையே இது மாற்றியமைத்திருக்கிறது. கண் அழுத்த நோய்க்கான வழக்கமான அறுவைசிகிச்சைகளோடு தொடர்புடைய சிக்கல்களுக்கான இடர்வாய்ப்பை குறைக்க வேண்டுமென்ற குறிப்பிட்ட இலக்குடன் இந்த உத்தி உருவாக்கப்பட்டிருக்கிறது.

மிகக்குறைந்த அளவிலான நுண் ஊடுருவல் மற்றும் தையல் போடும் அவசியமின்மை இதன் சிறப்பம்சங்களாகும். இச்சிகிச்சைக்குப் பிறகு, நோயாளி வேகமாக குணமடைந்து, இயல்பு நிலைக்கு திரும்ப முடியும். ஒரு சிறப்பான 24 மணி நேர ஐ ஓ பி கட்டுப்பாட்டை எம் ஐ ஜி எஸ் வழங்குகிறது. ஐஸ்டெண்ட், கஹுக்ஸ் டியூயல் பிளேடு, பேங் மற்றும் ஜி ஏ டி டி உட்பட, இந்தியாவில் பல வகைகளில் எம் ஐ ஜி எஸ் செயல்முறைகள் மற்றும் சாதனங்கள் தற்போது கிடைக்கின்றன. எம் ஐ ஜி எஸ் - ன் காரணமாக கண் அழுத்த நோய் பாதிப்புள்ள நோயாளிகளின் வாழ்க்கை தரத்தில் மிகப்பெரிய முன்னேற்றம் சாத்தியமாகிறது. கண் சொட்டு மருந்துகள் போடும் சிரமத்திலிருந்து அவர்கள் விடுதலை பெற முடியும் அல்லது பயன்படுத்தும் மருந்துகளின் எண்ணிக்கையை குறைக்க முடியும். அகர்வால்ஸ் மருத்துவமனையில், இத்தகைய சிகிச்சைகளில் 80% வெற்றி விகிதம் எட்டப்பட்டிருக்கிறது. இவற்றுள், 50% நேர்வுகளில், 40% -க்கும் கூடுதலாக கண்ணின் உள்ளார்ந்த அழுத்தம் குறைக்கப்பட்டிருக்கிறது.” என்று கூறினார். டாக்டர். அகர்வால்ஸ் கண் மருத்துவமனையின் பிராந்திய தலைவர் - மருத்துவ சேவைகள் டாக்டர். எஸ் சௌந்தரி பேசுகையில், “பாதிப்பு நிலையின் வளர்ச்சி இறுதி நிலையை எட்டும் வரை கண்டறியப்படுவதில்லை என்பதால், கண் அழுத்த நோய் (கிளாகோமா) என்பது, சத்தமின்றி மௌனமாக தாக்கும் திறன் கொண்ட நோயாகும். வழக்கமாகவே இத்தகைய நோயாளிகள் மிக தாமதமாகவே மருத்துவமனைக்கு வருகின்றனர். இதுநாள் வரை இதற்கு முறையான குணமளிக்கும் மருந்து கண்டறியப்படவில்லை. எனவே, நமக்கு இருக்கும் ஒரே சிகிச்சை, மருந்துகள் அல்லது அறுவைசிகிச்சை சார்ந்த மேலாண்மையே. கிளாகோமா வளர்ச்சியடையக்கூடிய நோயாக இருப்பினும், ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை பெறுவதன் மூலம் பார்வைத்திறன் மேலும் குறையாமல் அல்லது பார்வைத்திறன் இழப்பு ஏற்படாமல் தடுக்க முடியும். கண்ணின் உள்ளார்ந்த அழுத்தத்தைக் குறைப்பதற்கான சிகிச்சையில் மருந்துகள், லேசர் மற்றும் அறுவைசிகிச்சை போன்ற பல்வேறு வழிமுறைகள் இடம் பெறுகின்றன. லேசான கண் அழுத்த நோய் நேர்வின்போது கண் சொட்டு மருந்துகள் பரிந்துரைக்கப்படுகின்றன. மிதமானதிலிருந்து, தீவிரமான பாதிப்பு வரையிலான நேர்வுகளில் அறுவைசிகிச்சை செய்வதை தவிர வேறு வழியில்லை,” என்று கூறினார். “தாங்குதிசு நீக்க சிகிச்சை (ட்ராபெகுலெக்டோமி) என அறியப்படும் வழக்கமான அறுவைசிகிச்சையில் திரவ வடிதலுக்காக ஒரு புதிய பாதை உருவாக்கப்படுகிறது. இந்த வழிமுறையில், அளவுக்கு அதிக வடிகட்டலுக்கான இடர் எப்போதும் இருக்கிறது. இதன் காரணமாக, கண்ணுக்குள் மிகவும் குறைவான அழுத்தமும் மற்றும் அறுவைசிகிச்சை செய்யும் இடத்தில் தொற்றும் ஏற்படக்கூடும். எம் ஐ ஜி எஸ் உத்தியில், திரவ வெளிப்பாய்வை மேம்படுத்துவதற்கு கண்ணின் இயல்பான வடிகால் இயக்க முறையை அறுவைசிகிச்சை நிபுணர்கள் பயன்படுத்துகின்றனர்.,” என்று அவர் மேலும் விளக்கமளித்தார். எம் ஐ ஜி எஸ் சிகிச்சை உத்தியின் சிறப்பான ஆதாயங்களை கருத்தில் கொண்டு, கண் அழுத்த நோயுள்ள நபர்களுக்காக வரும் மார்ச் மாதத்தில் கருத்தரங்கு நிகழ்வு ஒன்றை வருடாந்திர நிகழ்வாக நடத்த டாக்டர். அகர்வால்ஸ் திட்டமிட்டிருக்கிறது. இதன் கண் மருத்துவ நிபுணர்கள் மற்றும் நோயாளிகளுக்கிடையே நேரடி கலந்துரையாடல்களை இந்நிகழ்வு ஏதுவாக்கும். கண் அழுத்த நோய் பற்றிய விழிப்புணர்வையும் மற்றும் அது குறித்த புரிதலையும் இக்கருத்தரங்கு சிறப்பாக அதிகரிக்கும்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## வீட்டில் வேலை செய்த சிறுமியை கொடுமைப்படுத்திய விவகாரம் பல்லாவரம்





சென்னை, 19 ஜனவரி 2024: வீட்டில் வேலை செய்த 18வயது சிறுமியை கொடுமைபடுத்தியதாக பல்லாவரம் திமுக எம்.எல்.ஏ கருணாநிதியின் மகன், மருமகள் மீது வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

உளுந்தூர்பேட்டை அருகே உள்ள திருநறுங்குன்றம் கிராமத்தைச் சேர்ந்தவர் வீரமணி. கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு மும்பைக்கு வேலைக்கு செல்வதாக கூறிவிட்டுச் சென்ற இவர், வீடு திரும்பவில்லை. இவருடைய மனைவி செல்வி சென்னை கொளப்பாக்கத்தில் ஒரு வீட்டில் வேலை செய்து வந்துள்ளார்.

சென்னை திருவான்மியூர் பகுதியில் இடைத்தரகர் சித்ரா என்பவர் மூலம் 12ம் வகுப்பு படித்து முடித்த தன் மகள் ரேகாவை, பல்லாவரம் தொகுதி திமுக எம்.எல்.ஏ கருணாநிதியின் மகன் ஆண்டோ மதிவாணன் வீட்டில் வேலைக்கு சேர்த்துவிட்டுள்ளார்.

ரேகா 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளதால், அவரை ஆண்டோ மதிவாணன் மற்றும் அவரது மனைவி மார்லினா ஆகியோர் கல்லூரியில் படிக்க வைப்பதாக உறுதியளித்ததாக தெரிகிறது. கடந்த ஏழு மாதத்திற்கு முன்பு அழைத்துச் செல்லப்பட்ட ரேகாவை, தனது குழந்தை அழும்போதெல்லாம், ஆண்டோ மதிவாணன் மற்றும் அவரது மனைவி அடித்து துன்புறுத்தி வந்ததாக கூறப்படுகிறது. ரேகாவை சிகரெட் கொண்டு ஆண்டோ மதிவாணன் சூடு வைத்ததாகவும் தெரிகிறது. மேலும் எம். எல். ஏவின் மருமகள், ரேகாவின் தலை முடியை வெட்டி அடித்து துன்புறுத்தி வந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், கடந்த ஏழு மாதங்களாக வீட்டில் அடைத்து வைத்து சித்தரவதை செய்யப்பட்டு வந்ததையடுத்து, தான் வீட்டிற்கு செல்ல வேண்டும் என்று கூறியுள்ளார் ரேகா.

இதற்கிடையே, பொங்கல் பண்டிகையை ஒட்டி ரேகாவை வீட்டிற்கு வருமாறு அவரது தாய் அழைத்துள்ளார். அப்போது, "நீ துன்புறுத்தப்பட்ட சம்பவத்தை வெளியில் சொல்லக்கூடாது. மீறி சொன்னால் கொலை செய்து விடுவோம்" என்று ஆண்டோ மதிவாணன் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் ரேகாவை மிரட்டியதாக கூறப்படுகிறது. தொடர்ந்து, ரேகாவை காரில் அழைத்து வந்து திருநறுங்குன்றம் கிராமத்தில் இறக்கி விட்டுச் சென்றுள்ளனர். இதற்கிடையே, ரேகாவுக்கு உடலில் பல இடங்களில் காயம் இருப்பதால், உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். எம்.எல்.ஏ மகனால் தான் துன்புறுத்தப்பட்டதாக உளுந்தூர்பேட்டை போலீஸில் ரேகா புகார் அளித்தார்.

இதற்கிடையே சென்னை பல்லாவரம் தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ., கருணாநிதியின் மகன் வீட்டில், வீட்டு வேலை செய்த சிறுமியை கொடுமைபடுத்தியதாக குற்றச்சாட்டு எழுந்தது. சிறுமியை கொடுமைப்படுத்திய எம்.எல்.ஏ.வின் மகன், மருமகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கைகள் எழுந்தன.

இந்த நிலையில், எம்.எல்.ஏ கருணாநிதியின் மகன் ஆண்டோ, மருமகள் செர்லினா மீது நீலாங்கரை அனைத்து மகளிர் காவல்நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். பெண் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. வீட்டில் பணிபுரிந்த சிறுமியை கொடுமைப்படுத்தியதாக அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் நீலாங்கரை மகளிர் போலீசார் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

## பல நாடுகளின் பரிசுகள் அயோத்தியை சென்றடைவதால் உலகம் முழுவதும் உள்ள மக்கள் கடவுள் ராமரை கொண்டாடுகின்றனர்

சென்னை, 19 ஜனவரி 2024: அயோத்தியில் ராமர் கோவில் திறப்பு விழா நடைபெற இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், உலகம் முழுவதிலும் இருந்து புனித நகருக்கு பரிசுகள் வரத் தொடங்கியுள்ளன. இதனுடன், பிற நாடுகளும் தங்கள் இந்து புலம்பெயர்ந்தோர் இந்த திறப்பு விழாவைக் கொண்டாடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன, ஜனவரி 22 ஆம் தேதி நிகழ்வை இந்திய கொண்டாட்டம் மட்டுமல்ல, உலகளாவிய ஒன்றாக மாற்றுகிறது.

இந்திய சிந்தனை மற்றும் கலாச்சார செழுமை என்பது தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளை ஒன்றிணைக்கும் ஒரு கருப்பொருள் பகுதி. நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகள் அயோத்திக்கு குறிப்பிடத்தக்க பரிசுகளை அனுப்புவதையும், இந்தப் பிராந்தியத்திற்குள் பகிரப்பட்ட அடையாளத்தை வெளிப்படுத்துவதையும் நாம் காண்கிறோம்.

நேபாளத்தின் ஜனக்பூரில் உள்ள சீதாவின் பிறந்த இடத்திலிருந்து ராமருக்கு விதிக்கப்பட்ட 3,000க்கும் மேற்பட்ட பரிசுகள் வெற்றிகரமாக அயோத்தியை அடைந்துள்ளன. வெள்ளி காலணிகள், ஆபரணங்கள் மற்றும் ஆடைகள் போன்ற பொருட்களை உள்ளடக்கிய பல்வேறு வகையான பிரசாதங்கள் கடந்த வாரம் நேபாளத்தில் உள்ள ஜனக்பூர் தாம் ராம்ஜானகி கோயிலில் இருந்து அயோத்திக்கு சுமார் 30 வாகனங்களில் கொண்டு செல்லப்பட்டது.

கூடுதலாக, அயோத்தி அசோக் வாடிகாவிடமிருந்து ஒரு தனித்துவமான பரிசைப் பெற்ற இலங்கையிலிருந்து ஒரு தூதுக்குழுவையும் பெற்றது. ராமாயண காவியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அசோக் வாடிகா என்ற பழம்பெரும் தோட்டத்தில் இருந்து ஒரு பாறையை பிரதிநிதிகள் வழங்கினர், அங்கு சீதை ராவணனால் சிறைபிடிக்கப்பட்டார்.

இந்தியாவுடனான வரலாற்றுப் பண்பாட்டுத் தொடர்புக்கு பெயர் பெற்ற தாய்லாந்து, அயோத்தியில் நடைபெறும் கும்பாபிஷேக விழாவிற்கு அயுத்யாவிலிருந்து சிறப்பு மண்ணை அனுப்பும். உலக இந்து அறக்கட்டளையின் நிறுவனரும் உலகளாவிய தலைவருமான சுவாமி விக்யானானந்த், இந்தியாவிற்கும் தாய்லாந்திற்கும் இடையிலான வலுவான கலாச்சார உறவுகளை இது போன்ற நிகழ்வுகள் மீண்டும் வலியுறுத்துகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

ராம்லாலா கோயிலில் நடைபெறும் ஜலாபிஷேக விழாவையொட்டி, தென்கொரியா, சீனா, கஜகஸ்தான், ஈரான், சுரினாம், கனடா, ரஷ்யா உள்ளிட்ட 156 நாடுகளில் இருந்து புனித நீர் அனுப்பப்பட்டு வருகிறது என்பதுதான் இந்த விழாவை உலக அளவில் கொண்டாடுகிறது. எனவே, இந்தியாவின் ராமர் கொண்டாட்டம் எல்லைகளைத் தாண்டி, உலகின் அனைத்து மூலைகளிலிருந்தும் மக்களை ஒன்றிணைக்கிறது என்பது தெளிவாகிறது.

## நிகரற்ற விருந்தோம்பலின் புகழை மீண்டும் நிலைநாட்டும் 'வெல்கம் ஹோட்டல்'! புத்தாண்டில் தனது விருந்தினர்களை 'வெல்கம்ஹோட்டல் சென்னை' மீண்டும் வரவேற்கிறது!



சென்னை, 19 ஜனவரி 2024: ஐடிசி ஹோட்டல்ஸ் இன்று சென்னை கதீட்ரல் சாலையில் உள்ள வெல்கம்ஹோட்டலை மீண்டும் திறப்பதாக அறிவித்தது. 1975 இல் நிறுவப்பட்ட, ஓர் அடையாளச் சின்னமான உடைமையாகத் திகழ்ந்த இந்த ஹோட்டல், அதன் புதிய அவதாரத்தில் பிரகாசமாகத் தெரிகிறது. உலகத்தரம் வாய்ந்த விருந்தோம்பல் சலுகைகளுடன் கூடிய இந்த குறிப்பிடத்தக்கதான ஹோட்டல், நகரின் பரபரப்பான சுற்றுலா மற்றும் வணிக நிலப்பரப்பை மேலும் வளப்படுத்த உறுதியளிக்கிறது.

ஐடிசி ஹோட்டலின் 'பொறுப்புணர்வுடனான சொகுசு' என்ற கொள்கைக்கு ஏற்ப, வெல்கம்ஹோட்டல் சென்னையானது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் தீவிரமாகச் செயல்படுகிறது. இந்த ஹோட்டல் எல் ஈ ஈ டி பிளாட்டினம் & எல் ஈ ஈ டி ஜீரோ கார்பன் சான்றிதழ்களைப் பெற்றுள்ளது. ஆற்றல்-திறனுள்ள பசுமைக் கட்டிடங்கள், புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்துதல், தண்ணீரைப் பாதுகாத்தல் மற்றும் மறுசுழற்சி செய்தல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான உறுதியான நடவடிக்கைகள் ஆகியவற்றின் மூலம் நிலைத்தன்மைக்கான அதன் உறுதிப்பாட்டிற்குச் சான்றளிக்கிறது. இந்த ஹோட்டலானது கார்பன் தடத்தைக் குறைக்க, அதிகபட்ச புதுப்பிக்கத்தக்க மின் ஆற்றலைப் பயன்படுத்தக் கூடிய, அதன் சொந்த மற்றும் ஆஃப்சைட் காற்றாலை பண்ணைகளைக் கொண்டுள்ளது. சென்னையின் பன்னாட்டு மற்றும் உள்நாட்டு விமான நிலையங்களுக்கு எளிதில் சென்று வரும் நிலையில் எண்.2 கதீட்ரல் சாலையில், நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள வெல்கம் ஹோட்டல், ஐடிசி ஹோட்டல் குழுமத்தின் முதல் சொத்து என்ற பெருமைக்குரியது. விருந்தோம்பலில் புதிய யுகத்தை கொண்டு வந்த சாதனைப் பதிவும் இதற்கு இருக்கிறது. தொடக்க விழாவில் பேசிய ஐடிசி ஹோட்டல் பிரிவு மண்டல தலைமை நிர்வாகி அனில் சதா கூறுகையில், "ஐடிசி ஹோட்டல் குழுமத்தில் வெல்கம்ஹோட்டல் சென்னை மிகவும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. இது இந்த மாபெரும் பெருநகரத்திற்கு நாங்கள் செலுத்தும் மரியாதையாகும். தென்னிந்தியாவிற்கான நுழைவாயிலாகத் திகழும் சென்னை ஒரு காஸ்மோபாலிட்டன் மையமாகும். இது ஆழமான வேரூன்றிய மரபுகள் மற்றும் நவீன தாக்கங்களின் சரியான கலவையை வழங்குகிறது. பல தசாப்தங்களாக சென்னையின் மாற்றத்திற்கு சாட்சியாக இருக்கும் இந்த புகழ்பெற்ற ஹோட்டலை மீண்டும் கொண்டு வருவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். வெல்கம்ஹோட்டல் சென்னை இந்த புகழ்பெற்ற பாரம்பரியத்தை வெளிக்கொணரும் விதமாக அமையும்" என்று தெரிவித்தார். இந்த ஹோட்டலில் எக்ஸிகியூட்டிவ் சூட்ஸ், கிளப் அறைகள், சுப்பீரியர் அறைகள் மற்றும் டீலக்ஸ் அறைகள் உட்பட 90 நன்கு உருவாக்கப்பட்ட அறைகள் உள்ளன. சிறப்பான, தாராளமான இடவசதிகளுடன் அமைந்துள்ள விருந்தினர் அறைகளைக் கொண்ட இந்த ஹோட்டல், சௌகரியம், அப்பழுக்கற்ற இனிய சேவை மற்றும் இந்திய விருந்தோம்பலின் கனிவு ஆகியவற்றின் நேர்த்தியான கலவையாக வழங்கப்படும் சேவையினை விருந்தினர்களுக்கு வழங்குகிறது. மத்திய-நூற்றாண்டைச் சேர்ந்த மேற்கத்திய பாணியுடன், கலை மற்றும் கட்டிடக்கலை உள்ளிட்டவற்றில் சென்னையின் வட்டார பாணிகளும் இணைந்து, ஹோட்டலின் அலங்காரத்தில் நவீன உள்துறை வடிவமைப்பு அழகியலுடன் தென்னிந்திய கட்டிடக் கலையின் அழகியல் அம்சங்களை கொண்டதாக இந்த ஹோட்டல் இப்போது திரும்பவும் புதுப்பொலிவுடன் திகழ்கிறது. இந்த ஹோட்டல் அதன் செழுமையான பாரம்பரியத்திலிருந்து உத்வேகம் பெறுகிறது - பெருநிறுவன முக்கியஸ்தர்கள், கலையுலகைச் சேர்ந்தவர்கள், குடும்பங்கள் மற்றும் தனிநபர்கள், சென்னை மாநகரின் தனித்துவமான அடையாளச் சின்னமாக திகழ்ந்த இந்த ஹோட்டலில் விருந்தினர்களாக தங்கியிருந்திருக்கின்றனர். வெளிநாட்டுத் தூதுவர்கள், இந்திய ஆயுதப் படைகளின் உயரதிகாரிகள், பல்வேறு துறைகளை சேர்ந்த பிரபலங்கள் ஆகியோரின் விருப்பத் தேர்வாக அமைந்துள்ள இந்த ஹோட்டலானது அனுபவங்கள் மற்றும் உறவுகளின் செழுமையான தொடர்பை வளர்க்கிறது. சென்னையில் பனிச்சறுக்கினை முதன் முதலாக அறிமுகப்படுத்திய அமைவிடம் இது என்பது குறிப்பிடத்தக்கது. இதனை உறுதிப்படுத்தும் விதமாக ஐடிசி ஹோட்டல்ஸ் (தெற்கு மற்றும் கிழக்கு) துணைத் தலைவர் ஜூபின் சோங்கத்வாலா கூறுகையில், "இந்த ஹோட்டலின் புதிய அவதாரமானது, ஒப்பிடமுடியாத தரம் மற்றும் வளப்படுத்தப்பட்ட விருந்தினர் அனுபவங்களை வழங்குவதில் ஐடிசி ஹோட்டல்களுக்கு இருக்கும் மேம்பட்ட தர நிலைகளை எடுத்துக்காட்டுகிறது. வெல்கம்ஹோட்டல் சென்னை ஐடிசி ஹோட்டல்ஸ்களின் முதல் சொத்து என்ற பாரம்பரியத்தை நிலைநிறுத்த முயற்சிக்கிறது. சென்னை மக்களின் ஆதரவிற்காக நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம், மேலும் இந்த நகரம் பிரதிபலிக்கும் அனைத்தையும் நினைவூட்டும் அனுபவங்களை தொடர்ந்து உருவாக்குவோம்." என்று தெரிவித்தார்.

பாரம்பரியம், உள்ளூர் அழகியல், சமகால அலங்காரங்கள் மற்றும் நவீன கால வசதிகள் ஆகியவற்றின் செழுமையான ஒருங்கிணைப்புடன், மிஜிசி ஹோட்டல்களின் புகழ்பெற்ற சமையல் நிபுணத்துவங்களும் வெல்கம்ஹோட்டல் சென்னையில் எந்த மாற்றமுமின்றி காணப்படும். நாள் முழுவதும் உணவருந்தும் இடமான 'வெல்கம்கஃபே மெரினா' பல்வேறு சுவையாகத் தயாரிக்கப்பட்ட சிற்றுண்டிகள் மற்றும் அளவில்லா தனித்தேர்வுகளை வழங்குகிறது. தனித்துவமான 'வெல்கம்ஸ்தாலிகா' பிராந்தியத்தின் மிகவும் விரும்பப்படும் சுவையான உணவுகளை ஒரே தட்டில் வழங்குகிறது, இது பயணிகளுக்கு சிறந்த பிராந்திய உணவு வகைகளை அறிமுகப்படுத்துகிறது. 'டேஸ்ட் ஆப் மெட்ராஸ்' சென்னையின் தெரு உணவுகளை மறுவடிவமைக்கப்பட்ட முறையில் காட்சிப்படுத்துகிறது. 'டுராண்ட்ஸ் மதுக்கூடமானது' பிரீமியம் பானங்கள் மற்றும் புதுவகை மதுக் கலவைகளின் ஒரு பெரிய தேர்வைத் தருகிறது. இதில் நிலையான மூலிகை மற்றும் ஆர்கானிக் காக்டெய்ல்கள் சுவையான சிற்றுண்டிகளுடன் சேர்ந்து கிடைக்கிறது. 'சன்பீன் கஃபே'யானது ஷார்ட் ஈட்ஸ், ஃபிங்கர் ஃபுட், தேநீர் மற்றும் காபி ஆகியவற்றை வழங்குகிறது. 'மஹ்ஜோங் ரூம்' சுவையான சீன உணவு வகைகளை வழங்குகிறது. ஹோட்டலின் லாபியில் உள்ள ஆடம்பரமான 'பேபெல்லே' சாக்லேட் டேக்அவே கவுண்டர் மேலும் சுவை கூட்டுவதாகும்.

வெல்கம்ஹோட்டல் சென்னையில் இரண்டு விருந்து அரங்குகள் உள்ளன: 375 பேர் அமரக்கூடிய தியேட்டர் வகை இருக்கைகளுடன் உள்ள 'மண்டபம்' மற்றும் 70-80 பேர் அமரக்கூடிய வகையில் மேற்கூரையில் அமைந்துள்ள 'சாக்ரி' ஆகியவையாகும். வெல்கம்ஹோட்டல் சென்னை என்பது வணிகம் மற்றும் ஓய்வுப் பயணங்களைச் செழுமைப்படுத்தும் வகையிலான அனுபவங்களுக்கு புதிய யுகப் பயணிகளின் திறவுகோலாகும். இந்த ஹோட்டல், ஐடிசி ஹோட்டல்ஸின் பூர்வீகமான காயா கல்ப் ஸ்பாவின் 'கே' மூலம் அதன் முழுமையான மற்றும் ஆறுதலான சிகிச்சை அறைகளில், புத்துணர்ச்சியூட்டும் ஆரோக்கிய சிகிச்சைகளை வழங்கும் ஒரு நிதானமான ஸ்பா பயணத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. அனைத்து சமகால உபகரணங்களுடன் கூடிய முழுமையாகச் செயல்படும் உடற்பயிற்சி மையமானது பரபரப்பான பயணிகளுக்கு முழுமையான அனுபவத்தை வழங்குகிறது. ஹோட்டலின் பசுமையான தோட்டங்களில் அமைந்துள்ள வெளிப்புற நீச்சல் குளம், வேலைக்குப் பிறகான அழுத்தங்களில் இருந்து விடுபடவும், ஓய்வெடுக்கவும் சரியான இடமாகும்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# வெடிகுண்டு மிரட்டல்: கோவையில் பலத்த போலீஸ் பாதுகாப்பு





சென்னை, 19 ஜனவரி 2024: வெடிகுண்டு மிரட்டல் எதிரொலியாக கோவையில் பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கோவை சிங்காநல்லூரை சேர்ந்தவர் சுப்பிரமணியம் (வயது45). இவர் இந்து மக்கள் கட்சி (தமிழகம்) தேர்தல் பிரிவு செயலாளராக உள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன்பு இவரது செல்போனுக்கு ஒரு அழைப்பு வந்தது. அதனை எடுத்து இவர் பேசினார். அப்போது எதிர்முனையில் இந்தியில் பேசிய மர்மநபர், தான் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பை சேர்ந்தவன். நான் மும்பையில் வெடிகுண்டு வைத்து உள்ளதாகவும், அது விரைவில் வெடிக்கும் எனவும் கூறியதாக கூறப்படுகிறது. அந்த நபர் இந்தியில் பேசியது, சுப்பிரமணியத்துக்கு புரியவில்லை. இதையடுத்து அவர் தனது அருகே இருந்த நண்பரான செந்தில்குமாரிடம் கொடுத்தார். அவர், ஆங்கிலத்தில் பேசினார். அப்போது எதிர்முனையில் பேசிய நபரும் ஆங்கிலத்தில் மும்பையில் வெடிகுண்டு வைத்திருப்பதாகவும் விரைவில் வெடிக்கும் என கூறி விட்டு இணைப்பை துண்டித்தார். இதனால் அதிர்ச்சியான இவர்கள் கோவை மாநகர போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். உடனடியாக கோவை போலீசார் மும்பை போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

மேலும் சுப்பிரமணியம், செந்தில்குமார் ஆகியோரை கோவை சிறப்பு நுண்ணறிவு பிரிவு போலீசார் அழைத்து விசாரித்தனர். இவர்களிடம் மும்பை போலீசாரும் விசாரித்தனர். தொடர்ந்து, அவர்களுக்கு வந்த செல்போன் எண்ணை வாங்கி ஆய்வு செய்தனர். அப்போது, அந்த மர்மநபர் இன்டர்நெட்டில் இருந்து பேசியது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் அந்த ஐ.டி. யாருடையது. எங்கிருந்து அழைத்தார். அவர் கூறியது உண்மைதானா? என்பது தொடர்பாகவும் விசாரித்து வருகிறார்கள்.

இன்னும் சில தினங்களில் அயோத்தி ராமர் கோவில் கும்பாபிஷேகம் மற்றும் கோவை கோட்டைமேடு சங்கமேஸ்வரர் கோவில் கும்பிஷேகம் நடைபெற உள்ளது. இதனையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த சமயத்தில் மும்பையில் வெடிகுண்டு வைத்திருப்பதாக இந்து மக்கள் கட்சியை சேர்ந்த பிரமுகருக்கு மர்ம நபர் ஒருவர் மிரட்டல் விடுத்தது கோவையில பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதையடுத்து கோவை மாவட்டம் முழுவதும் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பஸ் நிலையங்களுக்கு வரும் பயணிகளின் உடமைகள் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. பஸ் நிலையங்களிலும் யாராவது சந்தேகத்திற்கிடமாக சுற்றி திரிகின்றனரா? என்பதையும் போலீசார் கண்காணிக்கின்றனர். இதுதவிர வெடிகுண்டு நிபுணர்கள் 4 குழுக்களாக பிரிக்கப்பட்டு 24 மணி நேரமும் கோவை மாவட்டம் முழுவதும் முக்கிய இடங்களில் மெட்டல் டிடெக்கர், மோப்பநாய் உதவியுடன் சோதனை மேற்கொள்கின்றனர். கோவில்கள், பஸ் நிலையங்கள், ரெயில் நிலையங்களிலும் சோதனை மேற்கொண்டு வருகின்றனர். கோவை சந்திப்பு ரெயில் நிலையத்திலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. ரெயில்வே போலீசார் மற்றும் பாதுகாப்புபடை போலீசார் இணைந்து ரெயில் நிலையத்தில் உள்ள பிளாட்பாரங்கள் மற்றும் தண்டவாளங்களிலும் சோதனை மேற்கொண்டனர்.

# 20 கிலோ பார்லேஜி பிஸ்கட்டில் இளைஞர் கட்டிய ராமர் கோயில்



சென்னை, 19 ஜனவரி 2024: 20 கிலோ பார்லேஜி பிஸ்கெட்டில் 4 அடி உயரத்தில் எழிலான ராமர் கோயிலை கட்டி அசத்தியுள்ள வீடியோ, சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

அயோத்தியில் கட்டப்பட்டிருந்த 450 ஆண்டு கால பழமையான பாபர் மசூதி இந்துத்துவவாதிகளால் இடிக்கப்பட்டது. அது தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நடந்தது. அதில், பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் ராமர் கோயில் கட்டவும், அதற்கு ஈடாக அருகில் பாபர் மசூதி கட்ட இடம் ஒதுக்கவும் உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

அதன்படி, ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, ஆயிரக்கணக்கான கோடி செலவில் அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்பட்டு வருகிறது. இன்னும் கட்டி முடிக்கப்படாத நிலையில் 22 ந்தேதி ராமர் கோயில் குடமுழுக்கு நடத்தப்படுகிறது. இதற்கு எதிர்க்கட்சிகள் மட்டுமின்றி, இந்தியாவில் உள்ள 4 சங்கர மடங்களும் எதிர்ப்பு தெரிவித்துள்ளதுடன் குடமுழுக்கு விழாவில் கலந்து கொள்ள மாட்டோம் என்றும் அறிவித்துள்ளது.

ஆனாலும், நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு, திறப்பு விழா ஏற்பாடுகள் வெகு சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. அதனையொட்டி, அதனை கொண்டாடும் விதமாக பலரும் பல்வேறு செயல்களை செய்து தனது ஈடுபாட்டை காட்டி வருகின்றனர். இந்நிலையில் கொல்கத்தா இளைஞர் ஒருவர் பார்லேஜி பிஸ்கட்டுகளை வைத்து, 4 அடியில் அயோத்தி ராமர் கோவிலை கட்டியது சமூக வலைத்தளங்களில் வைரல் ஆகி வருகின்றது.

மேற்குவங்க மாநிலத்தை சேர்ந்த சோட்டான் கோஷ் மோனு என்பவர் 20 கிலோ பார்லே ஜி பிஸ்கட்டுகளை வைத்து 4 அடி உயரத்தில் ராமர் கோவிலின் மாதிரியை தத்துரூபமாக வடிவமைத்து அசத்தியுள்ளார்.

ஜனவரி 22ஆம் தேதி அயோத்தி ராமர் கோவில் திறப்பு விழா நடைபெற உள்ள நிலையில், இந்த அழகான சிற்பத்திற்கு பலரும் தங்கள் பாராட்டுகளை தெரிவித்து வருகிறார்கள். தற்போது அது தொடர்பான வீடியோ இணையத்தில் வெளியாகி பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

# ரூ. 1 லட்சம் அபராதத் தொகை செலுத்த மன்சூர் அலிகானுக்கு 10 நாள் அவகாசம்





சென்னை, 19 ஜனவரி 2024: ரூ. 1 லட்சம் அபராதத் தொகை செலுத்த மன்சூர் அலிகானுக்கு 10 நாள் அவகாசம் வழக்கி சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

மன்சூர் அலிகான், சமீபத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் த்ரிஷா குறித்துப் பேசியது பெரும் சர்ச்சையானது. அவர், லியோ படத்தில் த்ரிஷாவை பாலியல் தொந்தரவு செய்யும் காட்சி தனக்கு கிடைக்கவில்லை எனக் கூறியிருந்தார். இதற்கு த்ரிஷா, கடும் கண்டனம் தெரிவித்தார். மேலும் பல்வேறு பிரபலங்கள், தமிழ் திரையுலகை சார்ந்த சங்கங்களும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

பின்பு இது குறித்து விளக்கமளித்த மன்சூர் அலிகான், நான் பேசியதை திட்டமிட்டே வேறு மாதிரி கட் செய்து தவறாக பரப்புவதாக கூறி மன்னிப்பு கேட்கமுடியாது என தெரிவித்திருந்தார். இதையடுத்து மன்சூர் அலிகான் மீது ஐபிசி பிரிவு 509 பி மற்றும் பிற சம்பந்தப்பட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்ய டிஜிபிக்கு தேசிய மகளிர் ஆணையம் பரிந்துரைத்தது. அதன்படி மன்சூர் அலிகான் மீது இரண்டு பிரிவுகளில் ஆயிரம் விளக்கு அனைத்து மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கு தொடர்பாக விசாரணைக்கு ஆஜராக மன்சூர் அலிகானுக்கு சம்மன் அனுப்பப்பட்டது. அதன்படி விசாரணைக்கு நேரில் ஆஜராகி விளக்கமளித்தார்.

இதனை தொடர்ந்து த்ரிஷாவிடம் மன்னிப்பு கேட்டு மன்சூர் அலிகான் அறிக்கை வெளியிட்டார். த்ரிஷாவும் மன்னித்துவிட்டதாக எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்தார். பின்பு இந்த விவகாரம் தொடர்பாக சட்ட நிபுணர்களின் ஆலோசனைக்கு அனுப்பியது சென்னை காவல்துறை. பின்பு த்ரிஷாவிடம் விளக்கம் கேட்டிருந்தனர். மன்சூர் அலிகான் மன்னிப்பு கேட்டுவிட்டதால், மேல் நடவடிக்கை எடுக்க வேண்டாம் த்ரிஷா பதில் கடிதம் எழுதியிருந்தார்.

இதனிடையே த்ரிஷா, குஷ்பு மற்றும் சிரஞ்சீவி ஆகியோர் மீது மான நஷ்ட வழக்கு தொடரப்போவதாக மன்சூர் அலிகான் தெரிவித்திருந்தார். அதன்படி சென்னை உயர் நீதிமன்றத்தில் த்ரிஷா, குஷ்பு, சிரஞ்சீவி ஆகியோர் மீது மான நஷ்ட வழக்கு தொடர்ந்தார். அவர்கள் மூவரும் தலா ரூ.1 கோடி தர உத்தரவிடக்கோரி மனுவில் குறிப்பிட்டார்.

இந்த வழக்க நீதிபதி சதிஷ் குமார் முன்பு விசாரணைக்கு வந்த போது, பொது வெளியில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என மன்சூர் அலிகான் தெரிந்து கொள்ள வேண்டும். தொடர்ந்து இது போன்று சர்ச்சையான செயல்களில் ஈடுபடுவது கண்டிக்கதக்கது என நீதிபதி எச்சரித்தார். மேலும் பெண்களுக்கு எதிராக கருத்து தெரிவிக்கும் போது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது மனித இயல்பு. நீதிமன்ற நேரத்தை வீணடிக்கும் நோக்கில் மனு தொடரப்பட்டுள்ளதாக கூறி ரூ.1 லட்சம் அபராதத்துடன் வழக்கை தள்ளுபடி செய்தார். மேலும் அபராதத் தொகையை 2 வாரங்களில் சென்னை அடையாறு புற்று நோய் மருத்துவமனைக்கு செலுத்த வேண்டும் என்று டிசம்பர் 22 ந் தேதி உத்தரவிட்டார்.

இந்நிலையில்நிதி நெருக்கடியில் இருப்பதால் ரூ.1 லட்சம் அபராத தொகையை செலுத்த மன்சூர் அலிகான் 10 நாள் அவகாசம் கோரி மனுதாக்கல் செய்தார். மன்சூர் அலிகான் கோரிக்கையை ஏற்று சென்னை உயர்நீதிமன்றம் அவகாசம் வழங்கியது.

# அன்னபூரணி பட விவகாரம் யாரையும் புண்படுத்துவது நோக்கம் அல்ல: வருத்தம் தெரிவித்தார் நடிகை நயன்தாரா



சென்னை, 19 ஜனவரி 2024: அன்னபூரணி பட விவகாரம் தொடர்பாக நடிகை நயன்தாரா தனது வருத்தத்தை தெரிவித்துள்ளார். இந்திய திரையுலகின் முன்னணி நடிகையான நயன்தாரா நடிப்பில் இயக்குனர் நிலேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் உருவான திரைப்படம் 'அன்னபூரணி'. நடிகர் ஜெய் கதாநாயகனாக நடித்துள்ள இந்த படத்தில் சத்யராஜ், ரெடின் கிங்ஸ்லி, சுரேஷ் சக்ரவர்த்தி, கே.எஸ்.ரவிகுமார், ரேணுகா, பூர்ணிமா ரவி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ஜீ ஸ்டுடியோஸ், நாட் ஸ்டுடியோஸ், டிரைடன்ட் ஆர்ட்ஸ் இணைந்து தயாரித்துள்ள இப்படத்திற்கு தமன் இசையமைத்துள்ளார்.

இப்படம் டிசம்பர் 1-ம் தேதி திரையரங்குகளில் வெளியானது. இப்படம் கடந்த டிசம்பர் 29-ம் தேதி நெட்பிளிக்ஸ் ஓ.டி.டி தளத்தில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இந்தி மொழிகளில் வெளியானது. ஓ.டி.டி வெளியீட்டிற்கு பிறகு இந்த படம் பல்வேறு சர்ச்சைகளில் சிக்கியது.

இப்படத்தில் பிராமண பெண்ணான அன்னபூரணியை (நயன்தாரா) அசைவம் சாப்பிட வைப்பதற்காக நாயகன் பர்ஹான் (ஜெய்), "வால்மீகி எழுதிய ராமாயணத்தில் ராமரும், லட்சுமணனும் விலங்குகளை வேட்டையாடி சீதாவுடன் சேர்ந்து உண்டனர் என வசனத்தில் குறிப்பிடுவார்.

இந்த வசனத்தால் அன்னபூரணி படம் கடும் விமர்சனங்களைச் சந்தித்தது. குறிப்பாக மும்பையைச் சேர்ந்த இந்து அமைப்பின் இணையப் பிரிவினர் இப்படத்தில் ராமர் குறித்து அவதூறாகப் பேசியது மட்டுமல்லாமல் லவ் ஜிகாத்தை ஆதரிக்கும் வகையில் படம் உருவாகியுள்ளதாகக் போலீசில் புகார் அளித்தனர்.

இப்படத்திற்கு வடமாநிலங்களில் கடும் எதிர்ப்பு எழுந்த நிலையில் நெட்பிளிக்ஸ் தளத்திலிருந்து அன்னபூரணி திரைப்படம் நீக்கப்பட்டது.

இந்நிலையில் நடிகை நயன்தாரா அன்னபூரணி பட விவகாரம் தொடர்பாக அறிக்கை வெளியிட்டு தனது வருத்தத்தை தெரிவித்துள்ளார். அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

"ஜெய் ஸ்ரீ ராம்... இந்த குறிப்பை கனத்த இதயத்துடனும், 'அன்னபூரணி' திரைப்படம் தொடர்பான சமீபத்திய நிகழ்வுகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற உண்மையான விருப்பத்துடனும் எழுதுகிறேன். 'அன்னபூரணி'யை உருவாக்குவது ஒரு சினிமா முயற்சி மட்டுமல்ல, நெகிழ்ச்சியைத் தூண்டும் மற்றும் ஒருபோதும் கைவிடாத உணர்வைத் தூண்டுவதற்கான இதயப்பூர்வமான முயற்சியாகும். இது வாழ்க்கையின் பயணத்தை பிரதிபலிப்பதை நோக்கமாகக் கொண்டது, அங்கு தடைகளை சுத்த மன உறுதியுடன் கடக்க முடியும் என்பதை நாங்கள் கற்றுக்கொள்கிறோம். ஒரு நேர்மறையான செய்தியைப் பகிர்வதற்கான எங்கள் நேர்மையான முயற்சியில், நாம் கவனக்குறைவாக காயத்தை ஏற்படுத்தியிருக்கலாம். முன்பு திரையரங்குகளில் காட்சிப்படுத்தப்பட்ட தணிக்கை செய்யப்பட்ட திரைப்படம் ஓ.டி.டி. தளத்தில் இருந்து அகற்றப்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நானும் எனது குழுவும் யாருடைய உணர்வுகளையும் புண்படுத்தும் நோக்கம் கொண்டதில்லை, இந்தப் பிரச்சினையின் தீவிரத்தன்மையை நாங்கள் புரிந்துகொள்கிறோம். கடவுளின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டு அனைத்து வழிபாட்டு தலங்களுக்கும் செல்வதை வழக்கமாக வைத்திருக்கும் நான் ஒருபோதும் இதை உள்நோக்கத்துடன் செய்திருக்க மாட்டேன். அதையும் மீறி உங்களின் உணர்வுகளை எந்த வகையிலாவது புண்படுத்தி இருந்தால் அதற்கு நான் எனது உண்மையான மற்றும் இதயப்பூர்வமான மன்னிப்பைக் கோருகிறேன்.'

அன்னபூரணியின் பின்னால் உள்ள நோக்கம் உயர்த்துவதும் ஊக்கமளிப்பதும் ஆகும், துன்பத்தை ஏற்படுத்துவது அல்ல. கடந்த 20 ஆண்டுகளாக திரைப்படத் துறையில் எனது பயணம் நேர்மறையைப் பரப்புவதற்கும், ஒருவருக்கொருவர் கற்றலை வளர்ப்பதற்கும் ஒரு ஒற்றை நோக்கத்துடன் வழிநடத்தப்படுகிறது என தெரிவித்துள்ளார்.